Registered as a Newspaper.

பக்கங்கள்: பத்து

விலை ரூபா 10.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2037 ஆனி 03 ஹிஜ்ரி 1427 ஜ அவ்வல் 20 (17.06.2006) சனிக்கிழமை இதழ் 259

யாழ்.நகரில் தனித்துவமான கலைநயம் மிக்க துல்லியமான அச்சுவேலைகளுக்கு

SP சிறந்த இடம்

சுரபி பதிப்பகம்

267, நாவலர் வீதி யாழ்ப்பாணம்.

# அடுத்த வாரம் படையினர் மீது பாரிய தாக்குதலுக்குத் திட்டம்!

## புலனாய்வுப் பிரிவு அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு

இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதியில் அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் தமது தளபதிகள் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் வகையில் விடுதலைப் புலிகள் அடுத்த வாரம் தொடர்ச்சியான நேரடித் தாக்குதல்களை இராணுவத்தினர் மீது நடத்தி பேரழிவை ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாக, அரச புலனாய்வுச் சேவைகள் பாதுகாப்பு அதிகாரிகளை எச்சரித்திருப்பதாக கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புலனாய்வுத் தகவல்களின்படி இராணுவத்தினருக்கு எதிரான தாக்குதல்களை நடத்துவதற்குத் தெரிவுசெய்யப்பட்ட சிறிய குழுக்களைப் புலிகள் அனுப்பிவைத்துள்ளனர்.

இராணுவத் தளங்களுக்குள்ளேயும் தாக்குதல்களை நடத்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேற்றும் ஷெல் தாக்குதல்!

திருகோணமலை

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களை நோக்கி நேற்று இரண்டாவது நாளாகவும் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர் .

நேற்று மாலை 6 மணியளவில் மங்கிபிறிஜ் இராணுவமுகாமில் இருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தாக்குதல் நடத்த ஊடுருவிய மூவர் புலிகளால் சிறைபிடிப்பு!

### ஒருவர் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள இலுப்பையடிச்சேனையில் ஊடுருவி கிளைமோர்த் தாக்குதலை நடத்த முயன்ற ஒருவர் சுட்டுக்கொல்லபட்டார். மேலும் மூவர் கைது செய்யப்பட்டனர்.

இலுப்பையடிச்சேனையில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் போக்குவரத்தில் ஈடுபட்டோரை இலக்குவைத்து இராணுவத்தினர் இருவர் கிளைமோர்த் தாக்குதல் நடத்தினர்.

அவர்களை விடுதலைப் புலிகள் துரத்திச் சென்ற போது வாவிக்கரை காட்டுக்குள் நுழைந்து ஒளிந்து கொண்டனர். உடனடியாக அந்தப்பகுதி விடுதலைப்புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டது. இதேவேளை, தாக்குதலுக்கு அனுப்பியவர்களை மீட்பதற்காக பற்பொடி கொம்பனி புலனாய்வுத் துறை இராணுவ முகாமிலிருந்து பவள் கவச வாகனத்தில் இருவர் வாவியோரமாக இறக்கி விடப்பட்டனர்.

அவர்கள் தோணி ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு இராணுவத்தினரை மீட்க வந்தனர். அப்போது அந்தப் பகுதியில் சுற்றிவளைப்பில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 2 ஆவது நாளாகவும் வன்னியில் விமானப் படையினர் குண்டுவீச்சு!

கிளிநொச்சி

வன்னிப் பிரதேசத்தில் நேற்று இரண்டாவது நாளாகவும் விமானப்படையின் கிபிர் மற்றும் மிக் 29 ஜெட் போர் விமானங்கள் குண்டுத்தாக்குதல்களை நடத்தின.

கெப்பிற்றிக்கொல்லாவவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட கிளைமோர்த் தாக்குதலுக்கு புலிகளே பொறுப்பு எனக் கூறி, அதற்குப் பதிலடியாக புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது விமானப்படை நேற்று முன்தினம் குண்டுத்தாக்குதல் நடத்தியது.

நேற்று இரண்டாவது நாளாகவும் விமானத் தாக்குதல்கள் இடம்பெற்றன. முதல் கட்டமாக நேற்றுக் காலை 6.28 மணி முதல் காலை 6.35 வரை இரு கிபிர் விமானங்கள் குண்டுகளை வீசின. அதன் பின் இரண்டாம் முறையாக 2 கிபிர் விமானங்கள் மீண்டும் குண்டுகளை வீசி விட் டுச் சென்றன.

அதேவேளை, விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வன்னிப் பகுதிகளில் நேற்று மாலையும் விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல் நடத்தின.

நேற்று மாலை 5.15 மணிமுதல் 5.45 மணிவரை இரு மிக் - 29 ரக விமானங்கள் குண்டுத்தாக்குதலை நடத்தின.

மூன்று தடவைகள் வந்து ஆறு குண்டுகளை மிக் 29 ரக விமானங்கள் வீசின.

இந்தத் தாக்குதலால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பான தகவல்கள் எதுவும் இதுவரை கிடைக்கப் பெறவில்லை.

# புலிகளின் பகுதிகள் மீது படையினர் ஷெல் தாக்குதல்!


வவுனியா —

வவுனியா வடக்கில் விடுதலைப் புலிகளின் சுற்றிவளைப்புத் தேடுதலுக்குள்ளாக்கப்பட்டிருக்கும் மதியாமடு, சேமமடு பகுதிகளை இலக்கு வைத்து நேற்றுமுன்தினமும், நேற்றும் படையினர் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

தாக்குதல் நடத்துவதற்குத் தயாராகிக்கொண்டிருந்த ஆழ ஊடுருவும் படையணியினர்மீது நேற்றும், கடந்த செவ்வாய் மற்றும் வியாழக் கிழமைகளில் விடுதலைப் புலிகளால் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தில் இரு படையினர் கொல்லப்பட்டதுடன் - ஏனையோர் காட்டுக்குள் தப்பிச்சென்றனர். இவர்களைத் தேடிக் கண்டுபிடிக்க புலிகள் மேற்படி காட்டுப் பகுதியை சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)



புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதி மீது விமானப்படை குண்டுத்தாக்குதல்களை நடத்தி வருகின்ற அதேவேளை அநுராதபுரம் விமானப்படைத் தளத்தில் விமானிகளும் பொறியியலாளர்களும் எம்.ஐ. 24 தாக்குதல் ஹெலிகளை தயார்படுத்திவருவதைப் படத்தில் காணலாம். படம் - ரொய்ட்டர்

# ஈழத்தமிழருக்கு ஆதரவு தெரிவித்து தமிழகத்தில் பெரும் ஆர்ப்பாட்டம்!

சென்னை —

ஈழத்தமிழர்களுக்கு ஆதரவு தெரிவித்தும், ஈழத்து நிலவரங்களை நேரில் கண்டறிய இந்திய நாடாளுமன்ற குழுவொன்றை அனுப்புமாறு வலியுறுத்தி தமிழகம் எங்கும் நேற்று பெரும் ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றன.

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு சார்பில் 80 அமைப்புக்கள் தமிழ்நாட்டின் 40 இடங்களில் இந்த ஆர்ப்பாட்டதை நடத்தின.

சென்னையில் நேற்றுமாலை 4 மணியளவில் தொடங்கிய ஆர்ப்பாட்டத்தில் -

'தமிழக அரசே ஈழத்தமிழருக்கு உதவி செய்', 'பாதுகாப்போம் பாதுகாப்போம் ஈழத் தமிழரை பாதுகாப்போம்', 'இந்திய அரசே இலங்கைக்கு அனுப்பு நாடாளுமன்ற குழுவை', 'தமிழா தமிழா ஒன்றுபடு', ஈழத் தமிழர்களுக்காக (10 ஆம் பக்கம் பார்க்க)




# மூன்று தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை!

திருகோணமலை —

திருகோணமலை - பெரிய குளத்தில் நேற்றுக்காலை 3 தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

திருகோணமலை - அநுராதபுரம் வீதியில் வெலபம்பர பகுதியில் உள்ள பெரியகுளத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. பெரியகுளம் பகுதியில் பாரிய இராணுவ முகாம் உள்ளது.

கொல்லப்பட்ட இளைஞர்கள் திருமலை நகரில் கட்டுமானப்பணிகளுக்கு மணல் அனுப்பும் தொழில் செய்து வந்தனர்.

இவர்கள் மூவரும் மணல் ஏற்றுவதற்காக பெரிய குளம் பகுதிக்கு நேற்றுக் காலை 7.30 மணியளவில் உழவு இயந்திரத்தில் இவர்கள் சென்றனர். அதன் பின்னர் பிற்பகல் 2.30 மணியளவில் மூவரும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் சடலமாக கண்டெடுக்கப்பட்டனர்.

உழவு இயந்திரத்தின் சாரதி தலையில் இரத்தம் வழிந்த நிலையில் உழவு இயந்திரத்தின் (10 ஆம் பக்கம் பார்க்க)





# இங்கிலாந்து தன்னை ஒழுங்குபடுத்தட்டும்



நுரெம்பேர்க் —

பிரிவு B யின் இங்கிலாந்தும், ரினிடாட் டுபாக்கோவும் நேற்றுமுன் தினம் சந்தித்த அதேவேளை முன்னதாக இங்கிலாந்து, பரகுவேயுடன் ஆட்டத்தைச் சமன் செய்திருந்தது. ரினிடாட் டுபாக்கோ, சுவீடனுடன் ஆட்டத்தைச் சமன் செய்திருந்தது. இரு அணிகளுக்கும் FIFA 2006 வெற்றிச்சுவை எத்தகையது என்று தெரிந்திருக்கவில்லை.

இந்தநிலையில் பலம் வாய்ந்த இங்கிலாந்து தோல்வியைத் தழுவாது என்ற எதிர்வுகூறல் பொதுவாக இருந்தது. ஆனால் ஆட்டத்தின் போக்கு இங்கிலாந்தை இலகுவில் விடமாட்டோம் என்று எதிரணி கூறுவதுபோல அமைந்தது. இன்னொருபுறம் இங்கிலாந்தின் ஆட்டம் ஒழுங்குபடுத்தப்பட்டதாக இருந்தாலும் ஏனோ கோல் அடிக்கும் சந்தர்ப்பங்களை வீணாக்கிக் கொண்டே இருந்தார்கள்.




இதனால் எரிச்சலடைந்த இங்கிலாந்து ரசிகர்கள் வெய்ன் ரூணியை மைதானத்தில் இறக்கு என்று கூச்சல் போடத் தொடங்கிவிட்டார்கள்.

கிரவ்ச் மற்றும் லம்பாட் இருவருமே அற்புதமான வீரர்கள் என்பது ஆட்டத்திலேயே தெரிந்தது. இருந்தும் ரூணியை இறக்கவேண்டிய நிலை இங்கிலாந்து பயிற்றுனர் ஸ்வென் கொரான் எரிக்சனின் கையறு நிலையை எடுத்துக்காட்டியது என்று கொள்ளலாம்.

அந்தளவுக்கு டினிடாட் டுபாக்கோ அணி தம்மையும் சமாளித்துக் கொண்டு இடைக்கிடை டேவிட் பெக்காமுக்கு டென்சனையும் கொடுத்துக் கொண்டிருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் கோல்கள் பெறப்படாமலே சமனிலையில் ஆட்டம் முடியுமோ என்று அஞ்சியவேளையில் - கிரவ்ச் அற்புதமான HEADER மூலம் கோல்காப்பு வீரர் ஹிஸ்லொப்பைக் கவிழ்க்க 1:0 என்ற நிலை உருவாயிற்று.

இது 83ஆவது நிமிடத்தில் நடைபெற, 90ஆவது நிமிடத்தில் ஜெராட் இரண்டாவது கோலைப்போட ஆட்டம் 2:0 என்று இங்கிலாந்துக்கு மூன்று புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தது.

ரினிடாட் அணியின் தளராத போராட்டம் ஒருபுறம் பாராட்டுக்குரியதாக இருக்க, எதிர்வரும் ஆட்டங்களில் இங்கிலாந்து பெரும் வீச்சைக் காட்டாக்கூடியதென்பதும் மனதில் உறைக்க, இங்கிலாந்து அணியின் தலைவர் டேவிட் பெக்காம் சுயநலமில்லாமல் அணியை மட்டும் முதன்மைப்படுத்தி விளையாடிய நாகரிகம் நிறைந்த ஒரு வீரர் என்பது உயர்வாக மனதில் பதிந்தது.


இப்போதுள்ள நிலையில் இரண்டாவது சுற்றுக்குள் இங்கிலாந்து நுழைவது கஷ்டமாக இராதென்றே தோன்றுகின்றது. அப்படி நடைபெற்றால்தான் பயிற்றுனர் எரிக்சனின் இறுகிய முகம் கனியும்.

FIFA WORLD CUP GERMANY 2006

## இன்றைய ஆட்டங்கள்

| | |
|---|---|
| போர்த்துக்கல்-ஈரான் D பிரிவு | (பிராங்போர்ட் 6.30) |
| இத்தாலி-அமெரிக்கா E பிரிவு | (கைசர்ஸ்லோரேர்ன் 12.30) |
| செக்.குடியரசு - கானா E பிரிவு | (கொலொக்னே 09.30) |

# இலகு வெற்றியல்ல



பேர்ளின் —

பிரிவு B இல் சுவீடன் பரகுவே ஆட்டம், பரகுவே அணியைப் பொறுத்து மிக முக்கியமானதாகும். ஏனெனில், பரகுவே போட்டுக்கொடுத்த Own Goal தான் முதல் ஆட்டத்தில் இங்கிலாந்துக்கு வெற்றியைக் கொடுத்தது.

எனவே இரண்டாம் சுற்றுக்குத் தகுதிபெறுவதாயின் சுவீடனைத் தோற்கடித்தே ஆகவேண்டிய நிலை பரகுவேக்கு.

ஆட்ட ஆரம்பத்திலேயே சுவீடன் வீரர்கள் லார்சன் மற்றும் இப்ராகிமோவிச் இருவரும் பரகுவேயை கோல்கம்பத்தடியில் நெருக்க, பரகுவேயின் வல்டேஸ், சுவீடன் கோல்



பகுதியை நெருங்கினார். ஆனால் இருபகுதியுமே சந்தர்ப்பங்களை இழந்துகொண்டே இருந்தார்கள்.

பொதுவாக ஆட்ட ஆரம்பத்தில் சுவீடனின் கை ஓங்கியிருந்தாலும், திடீரென்று பரகுவேயின் முன்னரங்க வீரர்கள் வேகம் கொள்ளவே - பரகுவேயின் பின் அரங்க பாதுகாப்பு வீரர்கள் மிகுந்த அவதானத்துக்குள்ளாகவேண்டி ஏற்பட்டுவிட்டது.

அதிலும் இரண்டாவது அரைப் பகுதி பரகுவேயின் ஆதிக்கம் பெரிதாக மேலோங்கிக் காணப்பட்டது. குறிப்பாக, வல்டேஸின் தாக்குதல் தாங்கமுடியாததாகவே இருந்தது.

இருந்தாலும், சுவீடனின் லூஜென் பேக் சரியான நேரத்தில், சரியான முறையில் பெற்றுக்கொடுத்த ஒரேயொரு தங்ககோல் இரண்டாவது சுற்றுக்கு சுவீடனைக் கொண்டுபோகிறது.

அதேவேள்ளை, பரகுவே தாயகம் நோக்கிப் புறப்படும் நிலைக்கு வந்துவிட்டது. இதேநேரம் இருபதாம் திகதி நடைபெறவிருக்கும் சுவீடன் - இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியும் ஐரோப்பிய ஆதிக்



கத்தைக் காட்டப்போகும் போட்டியாகத்தான் இருக்கப்போகிறது.

எது எவ்வாறாயினும், ஜேர்மனியில் ஒன்றுகூடிய முப்பத்தியிரண்டு அணிகளில் பதினாறு அணிகள் தத்தமது தாயகம் நோக்கிப் புறப்படுகின்ற நேரம் வந்துவிட்டது. ரசிகர்களுக்கு அந்தச் சந்தர்ப்பங்கள் அவ்வளவு மகிழ்ச்சியாக இராதென்றே தோன்றுகிறது.

# காட்டாறாகிய ஆர்ஜென்ரீனா




ஜெல்சென்கிர்சன் —

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் நேற்று மாலை நடைபெற்ற பரபரப்பான ஆட்டத்தில் பலம் வாய்ந்த ஆர்ஜென்ரீன அணி 6 கோல்களை அடித்து சேர்பியாவை படுதோல்வி காணச்செய்தது.

52 ஆயிரம் ரசிகர்கள் கண்டுகளித்த இந்தப் போட்டி தொடங்கி 6ஆவது நிமிடத்திலேயே ஆர்ஜென்ரீன அணி தனது வித்தையைக் காட்டத்தொடங்கியது. மக்சி றொட்றிகஸ் முதலாவது கோலை அடித்து அணியை முன்னிலைப்படுத்தினார்.

இதன்பின் 30ஆவது நிமிடத்தில் எஸ்ரிபன் கம்பியாசோ 12 யார் தொலைவிலிருந்து அடித்த பந்து நேரே கோல் கம்பத்துக்குள் புகுந்து கொண்டது.

41 ஆவது நிமிடத்தில் மீண்டும் மக்சி றொட்றிகஸ் தனது அபார ஆட்



டத்தால் மற்றொரு கோலை அடித்தார்.

முதல் பாதியாட்டத்தில் 3:0 என வலுப்பெற்றிருந்த ஆர்ஜென்ரீன அணிக்கு இரண்டாவது பாதியாட்டம் தொடக்கத்தில் தடுமாற்றமாகவே இருந்தது. ஆனாலும், எதிரணியை கோல் போடவிடாமல் தடுத்துவிட்டது.

65ஆவது நிமிடத்தில் சேர்பிய வீரர் கஸ்மான் நடுவரால் சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு வெளியேற்றப்பட 10 பேருடன் ஆட்டத்தைத் தொடரவேண்டிய நிலைக்கு உள்ளானது அந்த அணி.

இந்த நிலையில் உஷாரடைந்த ஆர்ஜென்ரீன அணி, சேர்பியாவை நோக்கி கடும் தாக்குதலில் இறங்கியது. 78ஆவது நிமிடத்தில் கிரெஸ்போ ஒரு கோலை அடித்து அணியை வலுப்படுத்த, 84ஆவது நிமிடத்தில் ரெவெஸ் மற்றொரு கோலை அடித்தார்.


ஆட்டம் முடிவு கட்டத்தை நெருங்கிக்கொண்டிருந்தபோது மெசி 88 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றை



அடித்து 6:0 என்ற அடிப்படையில் சேர்பியாவை தோற்கடிக்க காரணமாய் அமைந்தார்.

### அரசியல் யாப்பு சபை உறுப்பினர் நியமனம்

# கூட்டமைப்பின் பரிந்துரையை நிராகரிக்குமாறு கோரிக்கை



கொழும்பு —

அரசியல் யாப்புச் சபைக்கான சிறுபான்மைக் கட்சிகளின் உறுப்பினர் தொடர்பான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பரிந்துரையை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நிராகரிக்க வேண்டும் என்று ஜாதிக ஹெல உறுமய வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தக்கட்சியின் நாடாளுமன்ற குழுத் தலைவர் அத்துரலிய ரத்ன தேரர் கூறுகையில் -

சிறுபான்மைக் கட்சிகள் சார்பான உறுப்பினரைப் பரிந்துரைக்க எமக்கான வாய்ப்பைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறுத்துள்ளது.

2001 ஆம் ஆண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சிறுபான்மை கட்சி உறுப்பினரை பரிந் துரைக்க ஜே.வி.பி. அனுமதித்தது. தற்போது அதைப் பின்பற்ற அவர்கள் மறுக்கின்றனர் எனத் தெரிவித்தார்.

# சுயாதீன குழுவிவகாரம் கிறிஸ்தவ சபை எதிர்ப்பு

கொழும்பு —


ஜனாதிபதியின் சுயாதீனக் குழுக்கள் நியமனமானது ஆபத்தான தென தேசிய கிறிஸ்தவ் சபை எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

அரசியல் யாப்பு சபையை மீறி ஜனாதிபதி மகிந்த இந்த நியமனங்களை அறிவிப்பதை ஏற்க இயலாது என்றும் அந்த அமைப்பு கூறியுள்ளது.

ஜனாதிபதி மகிந்தவால் நியமிக்கப்பட்டோர் அத்தகைய பொறுப்புகளை ஏற்காமல் புறக்கணிக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

# கண்காணிப்புக்குழு முன்னிலையிலேயே திருமலையில் கிபிர் விமானம் தாக்குதல்

## எழிலன் குற்றச்சாட்டு



திருகோணமலை —

திருகோணமலையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையிலேயே விமானப்படையினர் மக்கள் குடியிருப்புகள் மீது தாக்குதலை நடத்தினர் என திருமலை மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கிளைமோர்த்தாக்குதல் செய்தி எமக்கு கிடைத்தபோதே திருமலையில் ஷெல்தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தத்தாக்குதல் தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்குத் தெரியப்படுத்தினோம். இதன்போது கண்காணிப்புக் குழுவைச் சேர்ந்த ஒருபிரதிநிதி மூதூரில் தான் இருந்தார்.

திருமலை கண்காணிப்பு குழு அலுவலகத்துக்கு அருகில்தான் கடற்படை முகாமுள்ளது. அங்கிருந்து ஏவப்படும் ஷெல்களை அவர்கள் கண்காணிக்கக் கூடியதாக இருக்கும். ஆகையால் தாக்குதல் சத்தங்களை கேட்டுக் கொண்டிருப்பதாகவும், உங்களுடைய பகுதிகளை நோக்கி ஷெல்கள் ஏவப்பட்டுக் கொண்டிருப்பதாகவும் கண்காணிப்புக் குழுவினர் கூறினர்.

ஒரு அப்பட்டமான தாக்குதலை அனைவரது கண்முன்னாலேயே எமது பிரதேச மக்கள் குடியிருப்புக்கள் மீது நடத்துவது மிக மோசமான போர்நிறுத்த மீறலாகும்.

இத்தகைய தாக்குதல்களை தொடர்ச்சியாகப் படையினர் நடத்துகின்றனர். ஆனால், நாங்கள் கண்காணிப்புப் பணியை மட்டுமே செய்கிறோம் என்று கண்காணிப்புக் குழுவினர் கூறுவதும் அர்த்தமற்றது.

கண்காணிப்புக்குழுவின் கண் முன்னாலேயே இத்தகைய தாக்குதல்களை நடத்துவது மிகமோசமானது என்று கண்காணிப்புக்குழுவினருக்கு சுட்டிக்காட்டியுள்ளோம்.

வன்னிப் பிரதேசத்தில் கிளைமோர்த்தாக்குதல்கள் பெருமளவு நடத்த இராணுவம் முடுக்கிவிட்டுள்ளது. விடுதலைப்புலிகளை மட்டுமல்லாமல் பொதுமக்கள், அரச அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைவரையும் இலக்குவைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. பலர் கொல்லப்பட்டனர்.

இராணுவத்தின் ஆழ ஊடுருவும் அணியினர் தமிழ் மக்கள் மீது இத்தகைய தாக்குதல்களை நடத்தி சினம் கொள்ளவைக்க முயற்சிக்கின்றனர்.

இதனுடைய தாக்கமாகத்தான் அரசாங்கம் மோசமான செயற்பாடுகளை மேற்கொள்கிறது என்று சர்வதேச சமூகம் சொல்லும் நிலை உருவாகியுள்ளது.

இந்த நிலைமையை மாற்றவேண்டும் என்றுதான் இன்றைய பயணிகள் மீதான தாக்குதலையும், இராணுவத்தினரின் ஆழ ஊடுருவும் அணியினர்தான் செய்திருக்க வேண்டும். சிங்களப் பிரதேசத்துக்குள் இப்படியொரு தாக்குதலைப் புலிகள் நடத்திவிட்டார்கள் என்று கூறி தங்களுக்கான அனுதாபத்தை தேடவே இந்தக் கிளைமோர்த்தாக்குதலை இராணுவம் நடத்தியது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# திடீர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்த அமைச்சர்களுடன் மகிந்த ஆலோசனை



கொழும்பு

நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தலை நடத்துவது குறித்து அமைச்சர்களுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆலோசனை நடத்தியுள்ளார்.

பொதுத்தேர்தலுக்கான வாய்ப்பு மற்றும் நாட்டின் தற்போதைய நிலைமை ஆகியவை குறித்து அமைச்சர்களை குழுக்களாக ஜனாதிபதி மகிந்த சந்தித்து உரையாடியுள்ளார்.

அமைச்சர்களை நான்கு குழுக்களாக கடந்த இரு நாட்களாக ஜனாதிபதி மகிந்த சந்தித்தார். தற்போதைய நிலைமைகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதி மகிந்த விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஒவ்வொரு சந்திப்புக்கு முன்னதாகவும் பாதுகாப்பு நிலவரம், சமாதான நடவடிக்கைகள், விலைவாசி உயர்வு, ஊழல் மோசடிகள், சிறிலங்கா சுதந்திரக் கட்சி என பேச்சுவார்த்தைக்கு எடுக்கப்படவுள்ள 10 தலைப்புகள் அடங்கிய குறிப்புகள் அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டன.

அந்தத் தலைப்புகளை அடிப்படையாகக் கொண்டே இந்தச் சந்திப்புகள் நடைபெற்றதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பொதுத்தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான சாத்தியம் குறித்து அமைச்சர்களின் கருத்தையும் மகிந்த கேட்டுள்ளார்.

அமைச்சர்களில் பெரும்பான்மையானோர் பொதுத் தேர்தலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்காததுடன், அரசாங்கம் தொடங்கியுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படையாத வகையில், அத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தனர்.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது அரசாங்கத்தை ஆதரித்த சிறுபான்மைக் கட்சிகளை அரசாங்கத்துடன் இணைத்துக் கொண்டு, அமைச்சரவையில் திருத்தத்தைக் கொண்டு வருவது தொடர்பாகவும் மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சர்களின் கருத்தைக் கேட்டறிந்தார்.

விலைவாசி ஏற்றம் மற்றும் பொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கான தேவை மற்றும் அதற்கான நடவடிக்கைகள், அரச நிறுவனங்களில் காணப்படும் ஊழல் மோசடிகளை ஆராய்ந்து அவற்றை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல், அரச வருவாயை அதிகரித்தல், ஒஸ்லோ பேச்சுத் தோல்வியால் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் ஆகியவை தொடர்பாகவும் அமைச்சர்களுடன் மகிந்த கருத்துகளைப் பரிமாறியதாகக் கூறப்படுகிறது. (தே)

# முட்டாள்தனமான படுகொலைகளை இலங்கை அரசே செய்கிறது

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு

கொழும்பு —

அரசாங்கம் முட்டாள்தனமான மனிதப் படுகொலைகளை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கையை கேள்விக்குறியாக்கிய தற்போதைய ஆட்சியாளர்களின் முட்டாள்தனமான நடவடிக்கையால் பொதுமக்களுக்கு எந்தவித நலனும் ஏற்படாது.

ஒரு நாட்டின் ஆட்சியாளர்களின் முக்கிய பொறுப்பு நாட்டிலுள்ள அனைத்து மக்களையும் பாதுகாப்பதாகும். யுத்தத்தால் மகிழ்ச்சியடைந்துள்ள ஜே.வி.பியினர் தற்போது தாம் என்ன செய்ய வேண்டும் என்பதை தீர்மானித்துக் கொள்ளவேண்டும்.

மனித உயிர்களை பலிகொடுக்க அரசாங்கம் தயாராக இருப்பின்- மக்களுடன் இணைந்து செயற்படுவதைவிட வேறு வழி ஐக்கிய தேசியக்கட்சிக்கு இல்லை என அந்தச் செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக புலிகளை அங்கீகரிக்கக் கூடாது

## மங்கள சமரவீர தெரிவிப்பு

கொழும்பு —


தமிழீழ விடுதலைப் புலிகளை இலங்கைத் தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிக்கக் கூடாது என்று நோர்வேயில் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

நோர்வே வெளிவிவகாரங்களுக்கான நாடாளுமன்ற நிலைக்குழு கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தடை சரியானதே என்றும், அமைதிப் பேச்சுக்களுக்காக ஜனநாயகப் பன்முகத் தன்மையை உருவாக்க வேண்டுமென்றும், தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழர்களின் ஏக பிரதிநிதிகளாக அங்கீகரிப்பதை நிராகரிக்க வேண்டும் என்றும் மங்கள சமரவீர கேட்டுக் கொண்டார்.

இந்தக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் பேரியல் அஷ்ரப், வடபகுதியிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் கள் 16ஆண்டுகளாக அகதி முகாம் களில் வாழ்ந்து வருகின்றனர் என் றார்.

நோர்வே பிரதமர் ஜென்ஸ் ஸ்டோல்டென்பெர்க்கை மங்கள சமரவீர சந்தித்தார். இலங்கைக்கான பொருளாதார உதவிகளை நோர்வே



தொடர்ந்து வழங்கும் எனவும் அவர் உறுதியளித்தார்.

நோர்வே போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு துறை அமைச்சர் லிவ் சிக்னெ நவர்ஸ்டெயையும் மங்கள சமரவீர சந்தித்துப் பேசினார்.

இந்தச் சந்திப்புக்களின் போது அமைச்சர்கள் பேரியல்,ரிசார்ட் பதியுதீன் மற்றும் நோர்வேக்கான இலங்கைத் தூதுவர் அகமெட் ஜாவ்வாட் ஆகியோர் உடனிருந்தனர்.

# பயங்கரவாதிகளைத் தோற்கடிக்க சர்வதேச சமூகம் உதவ வேண்டும்

## அரசாங்கம் கோரிக்கை

கொழும்பு —

அனுராதபுரம் கெப்பிட்டிக் கொல்லாவவில் நடைபெற்ற கிளைமோர் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து பயங்கரவாதத்தைத் தோற்கடிக்க சர்வதேசசமூகம் தமக்கு உதவ வேண்டும் எனஅரசாங்கம் கோரியுள்ளது.

கொழும்பில் ஊடகவியலாளர் மாநாட்டில் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா கூறியதாவது-

பயங்கரவாதிகளின் நடவடிக்கையை அரசாங்கம் வன்மையாகக் கண்டிக்கிறது. மக்கள் அமைதி காக்க வேண்டும். பயங்கரவாதிகளின் இந்தச் செயற்பாட்டை கவனத்தில் கொண்டு மக்களும், சர்வதேச சமூகமும் எம க்கு உதவவேண்டும் எனத் தெரிவித் தார்.

இதேவேளை அமைச்சர் கெகலிய ரம்புக்வெல கூறியதாவது -

இந்தச் சம்பவம் தொடர்பாக உடனே சர்வதேச சமூகத்துக்கும், இணைத் தலைமை நாடுகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

யுத்தம் பிரகடனப் படுத்தப்பட்டு விட்டதாக அர்த்தமில்லை. என்ன நடந்தது என்பதை கண்காணிப்புக் குழுவினர் ஆராய்வர்.

இத்தகைய தாக்குதல்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்கவே விடுதலைப் புலிகள் நிலைகள் மீது வானிலிருந்தும், தரையிலிருந்தும் தாக்குதல்கள் நடத்தப்பட்டன எனத் தெரிவித்தார்.

போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தொர்பின்னுர் ஓமர்ச ன் கருத்துக் கூறுகையில் -

இந்தச் சம்பவம் அமைதி முயற்சிக்கு அச்சுறுத்தலானது எனவும், கெப்பிட்டிக்கொல்லாவ பகுதிக்கு 5 கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் சென்று விசாரணைகளை நடத்துவதாகவும் தெரிவித்தார்.

# இக்கட்டான சூழலில் ஐ.தே.க பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## என்கிறார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு —

தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள இக்கட்டான சூழ்நிலையில் ஐக்கிய தேசியக்கட்சி பொறுப்புடன் செயற்படும் என தான் நம்புவதாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் செயலாளர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கான இறுதி தீர்வை காணும் நோக்கில் அமைக்கப்பட்ட சர்வகட்சி ஆலோசனை குழுவில் ஐ.தே.க இடம்பெற்று தனது அர்ப்பணிப்பை வெளிக்காட்ட வேண்டும்.


குறுகிய அரசியல் இலாபங்களை விட்டுவிட்டுநாட்டின் இறைமையைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் தம்மை முற்று முழுதாக இணைத்துக் கொள்ள வேண்டிய காலம் தற்போது ஏற்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் செயற்பாடுகள் தேச, சர்வதேச ரீதியில் வரவேற்பை பெற்றிருக்கும் இந்தவேளையில் எதிர்க் கட்சியினர் அரசாங்கத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்எனவும் அவர் தெரிவித்தார்.

# இந்திய மத்திய அரசுடன் இணைந்து

# ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு

## தமிழக முதல்வர் தெரிவிப்பு



சென்னை —

இந்திய மத்திய அரசுடன் தொடர்பு கொண்டும், ஒத்தகருத்துடைய தோழமைக் கட்சிகளின் துணையுடனும், இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காணப்படுமென தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.கவின் நிலைப்பாடு என்ன என்பது குறித்து விளக்கமளித்து அவர் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தி.மு.க.வின் நிலைப்பாடு தொடக்க காலத்தில் இருந்து இது வரையில் தமிழ் இன உணர்வு, மனதநேயம் இவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு இருந்து வருகிறது.

தமிழகத்தில் கடந்த ஆண்டு கூட சட்டசபையில் இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து அ.தி.மு.க அரசு நிறைவேற்றிய தீர்மானத்தை மக்கள் மறந்திருப்பர் என்று எண்ணிக் கொண்டு, தி.மு.க மீது ஏதாவது பழி போட வேண்டுமென்று திட்டமிட்டு, திருட்டுத்தனமாக துண்டுப்பிரசுரங்களை வெளியிட்டு விஷமப் பிரசாரம் செய்யப்படுவதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

இலங்கையில் இருந்து தமிழர்கள் அகதிகளாக ஓடிவருவது கண்டு, மனமொடிந்து, மாநில அரசு மத்திய அரசு அளவில் அவர்களுக்குத் தேவையான வசதிகளை வழங்கவும், அங்கே தொடங்கிய அமைதிப் பேச்சுவார்த்தை ஆக்கபூர்வ மான பலனைக் கொடுக்க வேண்டுமென்ற விழை வினையும் வெளிப்படுத்தியுள்ளோம்.

இலங்கையிலும் சரி, இங்கே தமிழகத்திலும் சரி, எந்த வகையிலும் வன்முறை தலைதூக்காமல் இருப்பதற்கான வழி காணவேண்டுமென்ற தவிப்புடன் தி.மு.க விளங்குகிறது.

மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு, ஒத்த கருத்துடைய தோழமைக் கட்சிகளின் துணையுடனும் இலங்கைத் தமிழர் பிரச்சினை சுமுகமாக முடிவடைய செயற்படுமே அல்லாமல், குறுக்கு வழி, கோணல் வழி எதுவும் தேடாது என்பதை திட்டவட்டமாகத் தெளிவுபடுத்துகிறேன் என்று அவர் அதில் தெரிவித்துள்ளார்.

# புலிகளின் தாக்குதல் தொடர்ந்தால் புரிந்துணர்வு ஒப்பந்தம் மீளாய்வு

## அமைச்சர் ரம்புக்வெல தெரிவிப்பு



கொழும்பு —

புலிகளின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்றால் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீள்பரிசீலனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்படுமென தேசிய பாதுகாப்பு தொடர்பான பேச்சாளரும், அமைச்சருமான கெகெலிய ரம்புக்வெல நேற்று முன்தினம் தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது -

கெப்பிட்டிக் கொல்லாவ நோக்கிச் சென்று கொண்டிருந்த இலங்கை போக்குவரத்துச் சபையினரின் பஸ் கிளைமோர் குண்டுத் தாக்குதலுக்கு இலக்கானது. இதில் 65 பயணிகள் கொல்லப்பட்டனர். 87 பேர் காயமுற்றனர். இந்தவீதியில் இராணுவ வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுவதில்லை. புலிகள், பொதுமக்களை இலக்கு வைத்தே இந்தக்குண்டுத் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குண்டுத் தாக்குதல்களை நடத்தி தெற்கில் இன மோதல்களை ஏற்படுத்தித் தமது இலக்கை எட்டுவதே இவர்களின் நோக்கமாகும் என அவர் தெரிவித்தார்.

# 35 ஆயிரம் சட்டவிரோத ஆயுதங்கள் இலங்கையில் பாவனையிலுள்ளது

## என்கிறார் பவ்ரல் அமைப்பின் தலைவர்

கொழும்பு —

இலங்கையில் 35 ஆயிரம் சட்ட விரோத ஆயுதங்கள் பாவனையில் உள்ளதாகவும், இவற்றைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் பவ்ரல் அமைப்பின் தலைவர் கிங்ஸ்லி றொட்றிக்கோ தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

எதிர்வரும் 25 ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 7 ஆம் திகதி வரை அமெரிக்காவில் ஐ.நாவின் சட்டவிரோத ஆயுதப் பாவனைக்கு எதிரான மாநாடு இடம்பெறவுள்ளது. இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான குழுவினர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த மாநாட்டில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கை மக்களின் கையெழுத்துக்கள் அடங்கிய மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

சட்டவிரோத ஆயுத பாவனையைக் கட்டுப்படுத்த அரசியற் கட்சிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றோம். இந்தவகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஜாதிக ஹெல உறுமயவுடன் பேச்சு நடத்தப்பட்டது. விரைவில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பியுடன் பேச்சு நடத்தப்படும்.

சட்டவிரோத ஆயுத பாவனையைக்கட்டுப்படுத்த ஜனாதிபதி ஆணைக் குழுவொன்றை நியமித்துள்ளார். அதனை நாம் வரவேற்கிறோம் என அவர் தெரிவித்தார்.

# இரு தரப்பும் வன்முறைகளை உடன் கைவிட வேண்டும்!

## சொல்ஹெய்ம் கோரிக்கை



கொழும்பு —

இலங்கையில் நடைபெறும் இன மோதல்களில் எந்தவித தொடர்பும் இல்லாத குழந்தைகள் மற்றும் பெண்கள் கொலை செய்யப்படுவது மன்னிக்க முடியாத செயற்பாடு என நோர்வே சர்வதேச அபிவிருத்தி

கெப்பிட்டிக்கொல்லாவ கிளைமோர் தாக்குதல் சம்பவம் தொடர்பாக பி.பி.சி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

அனுசரணையாளர் என்ற வகையில் இந்த வன்செயலுடன் தொடர்புடையவர்கள் யார் என்பது பற்றி எம்மால் உடனடியாகக் கருத்துக் கூற முடியாது.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் வன்செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர் என்பது தெரிகிறது. இரு தரப்பினரும் வன்செயல்களை நிறுத்திவிட்டு பேச்சுவார்த்தைக்கு வந்து அடுத்ததாக என்ன செய்ய வேண்டும் என்பதை ஆராய்ந்து கலந்துகொள்ள வேண்டும்.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் அமைதி முயற்சிக்கான முக்கிய தீர்மானங்களைப் பெற்றுக்

வன்முறைகளைக் கைவிட வேண்டும். வன்முறைகளால் ஏற்படுகின்ற இழப்புகள் குறித்து இரு தரப்பினருக்கும் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளோம். அதற்கமைய செயற்படுவதன் மூலம் நாட்டில் அமைதியை நிலைநாட்ட முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை - இந்தக் கிளைமோர் தாக்குதல் தொடர்பான எவ்வித கருத்துகளையும் கூறமுடியாத நிலை உள்ளதோடு, இதை யார் செய்தார்கள் என்று கூறிக்கொள்ள முடியாது என்று போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பேச்சாளர் தெரிவித்தார்.

ராஜா யாழ்ப்பாணம்

பரத், பத்மபிரியா ஆரியா மற்றும் பலர் நடித்த



# புலிகளை தடைசெய்க ஜே.வி.பி கோரிக்கை

கொழும்பு —

தமிழீழ விடுதலைப் புலிகளை அரசாங்கம் தடை செய்ய வேண்டுமென்று ஜே.வி.பி கோரிக்கை விடுத்துள்ளது.

கெப்பிட்டிக் கொல்லாவ சம்பவத் தையடுத்தே ஜே.வி.பி.யின் மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வடக்கு - கிழக்கைப் பிரிப் பதற்கான நடவடிக்கையை அரசாங் கம் மேற்கொள்ள வேண்டும் என்றும் ஜே.வி.பி கோரியுள்ளது.

# இலவச சீருடைத் துணிக்கு 1260 மில்லியன் ரூபா செலவு

கொழும்பு —

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு அடுத்த வருடம் ஆரம்பமாகும் புதிய கல்வியாண்டுக்கான இலவச பாடசாலை சீருடைத்

# சமுர்த்தி வங்கி கணக்கை ஆரம்பிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 2006 ஆம் ஆண்டு சமுர்த்தி முத்திரை பெற்ற பயனாளிகள் திருநெல்வேலி சமுர்த்தி வங்கியில் கட்டாய சேமிப்புக் கணக்கை ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தினங்களில் கிராம சேவகர் பிரிவு ரீதியாக வங்கிக் கணக்கை ஆரம்பிக்குமாறு பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.

ஜே/97 பிரிவு பயனாளிகள் எதிர்வரும் 19 ஆம் திகதியும், ஜே/98, ஜே/104 பயனாளிகள் 20 ஆம் திகதியும் ஜே/100, ஜே/101 பயனாளிகள் 21 ஆம் திகதியும் - ஜே/102, ஜே/105 பயனாளிகள் 22 ஆம் திகதியும் - ஜே/103 பயனாளிகள் 23 ஆம் திகதியும், ஜே/110, ஜே/113 பயனாளிகள் 26 ஆம் திகதியும், ஜே/114 பயனாளிகள் 27 ஆம் திகதியும் வங்கிக் கணக்கை ஆரம்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். (110)

# இராணுவ சிப்பாய் காயம்

யாழ்ப்பாணம்

இணுவிலில் இராணுவ காவலரண்மீது நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாகப் படையினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று முன்தினம் காலை 7.25 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் இராணுவ சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்து பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

# யாழ். செயலகத்தில் தேங்கிக்கிடக்கும் மாணவர்களின் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்

தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களின்அடையாள அட்டைகள் யாழ். செயலகங்களில் தேங்கிக் கிடப்பதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் பலரும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்துக்கு விண்ணப்பித்திருந்தனர்.

இவ்வாறு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்களது பல தொகுதி தேசிய அடையாள அட்டைகள் -யாழ். செயலகத்துக்கு வந்துள்ளன. பாடசாலை அதிபர்கள் இவற்றைப் பொறுப்பேற்காத நிலையில் அவை நீண்ட நாட்களாக செயலகத்திலேயே தேங்கிக் கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, அடையாள அட்டைக்கு நீண்ட காலத்துக்கு முன்பு விண்ணப்பித்த பாடசாலை மாணவர்கள், தமது அடையாள அட்டைகள் தொடர்பாக அதிபர்களிடம் கேட்டபோது அடையாள அட்டைகள் இன்னமும் வந்து சேரவில்லை எனக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடந்து முடிந்த க.பொ.த உயர்தரப் பரீட்சையின்போது தேசிய அடையாள அட்டைகள் இல்லாமையால் மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியமை குறிப்பிடத்தக்கது.

# யாழ். பொது நூலக இழப்பீட்டுக்கான நிதியை உடன் வழங்க கோரிக்கை

யாழ்ப்பாணம்

யாழ். பொது நூலகத்தின் இழப்பீட்டுக்கான நிதியை உடன் வழங்குமாறு கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். மாநகர சபை ஆணையாளர் சீ.வீ.கே.சிவஞானம் தெரிவித்தார்.

பொது நூலகம் 1981 ஆம் ஆண்டு தீயிடப்பட்டு முற்றாகச் சேதமாக்கப்பட்டது. 22 வருடங்களின் பின்னர் பொது நூலகம் மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ள போதும் - நூலகத்தைப் பாதுகாப்பதற்கும், முகாமைத்துவம் செய்வதற்குமாக ஆகக்குறைந்த வருடாந்த செலவினமாக 19 மில்லியன் தேவைப்படுகிறது.

இதைவிட சம்பள மீளளிப்புக் கொடைகள் கழிப்பனவு செய்யப்பட்டதன் பின்னர் மாநகரசபை வருடாந்தம் 8 மில்லியன் ரூபாவைப் பொறுப்பேற்கவேண்டிய நிலை ஏற்படுகிறது.

பலவித பின்னடைவுகளால் நலிந்து போயுள்ள மாநகர சபையானது இத்தகைய பாரிய செலவீனத்தைச் சமாளிக்க முடியாத நிலை தோன்றியுள்ளது.

இந்த நிலையைக் கருத்திற்கொண்டு 1982 ஆம் ஆண்டில் இணங்கிக் கொள்ளப்பட்டதற்கு அமைவாக இழப்பீட்டு தொகையான மீதி 8.5 மில்லியன் ரூபாவை உடன் வழங்க ஏற்பாடு செய்யுமாறு அந்தக் கடிதத்தில் கேட்டுக் கொள்ளப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சனசமூக நிலைய செயற்பாடு நிறுத்தம்

மீசாலை

மீசாலை கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையம் கடந்த பல மாதங்களாகத் தனது சேவையை இடைநிறுத்தியுள்ளது.

இந்த சனசமூக நிலையம் கடந்த சில மாதங்களாக இயங்காததால், இந்தச் சனசமூக நிலையம் ஊடாக பயனடைந்த வாசகர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனால், இந்தப் பகுதி வாசகர்கள் வேறு தூர இடங்களுக்குச் சென்றே பத்திரிகைகளை வாசிக்க வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீமுருகன் சன்சமூக நிலையம் சாவகச்சேரி நகரசபையின் கீழ் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (25)

# திண்மக்கழிவு முகாமைத்துவத்துக்கு 75 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்தில் திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான திட்டத்துக்கு 75 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்துக்கு யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச சபைகளுக்கு 5 லட்சம் ரூபா வீதம் வழங்கப்படவிருக்கின்றன.

இந்த நிதி மூலம் கட்டாக்காலி நாய்களை பிடிக்கும் தள்ளுவண்டிகள் கொள்வனவு, திண்மக் கழிவுகளை அகற்றுவதற்கான வாகன வசதி மற்றும் திண்மக்கழிவுகளை பசளையாக மாற்றுதல் போன்ற திட்டத்துக்காகச் செலவிடப்படவுள்ளன.

திண்மக் கழிவு முகாமைத்துவம் தொடர்பான திட்டங்களைத் தயாரித்து உடன் அனுப்பும்படி பிரதேச மற்றும் உள்ளூராட்சி சபை ஆணையாளர் ஆகியோர் கேட்டுள்ளனர்.

# பலாலி ஆசிரிய கலாசாலையை இடம் மாற்றுவதற்கு முயற்சி

திருநெல்வேலி

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை பாரிய இட நெருக்கடியின் மத்தியில் இயங்கி வருவதால் - அதனை யாழ். நகரை அண்டிய பகுதியிலுள்ள, தற்போது இயங்காத நிலையிலுள்ள பாடசாலைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது ஆசிரிய கலாசாலை திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் தனியார் வீடொன்றிலும், சிறிய மண்டபம் ஒன்றிலுமே பெரும் இட நெருக்கடியின் மத்தியில் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் அடுத்து வரும் மாதங்களில் புதிய ஆசிரிய மாணவர்களும் உள்வாங்கப்படவுள்ளதால் இட நெருக்கடி மேலும் அதிகரிக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, இதைக் கருத்தில் கொண்டே கலாசாலையை யாழ். புறநகர் பகுதியில் தற்போது இயங்காதுள்ள பாடசாலைக்கு மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கான அனுமதியை மாகாண கல்வி அமைச்சிடம் கோரியுள்ளதாக கலாசாலை அதிபர் த.காங்கேசன்பிள்ளை தெரிவித்தார்.

அத்துடன் கலாசாலையை வேறு இடத்துக்கு மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பாடசாலையின் கூரைகள் மற்றும் கட்டடங்கள் என்பன சேதமடைந்துள்ளதாகவும் அதைத் திருத்தித் தருவதற்கு அரசாங்க அதிபர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறியை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும் - அனுமதி வழங்கப்பட்டதான செய்தி தவறானதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை இரண்டு



பெயர் : கிருஷன்
முகவரி : வரணி.

அகவை ஏழு



பெயர் : க.ஜீவன்
முகவரி : வரணி.

வாழ்க வளமுடன்



சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# நடமாடும் ஆய்வுகூட சேவை நாளை மறுநாள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்

யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு மத்திய சுகாதார அமைச்சால் வழங்கப்பட்டுள்ள நடமாடும் ஆய்வுகூடம் நாளை மறுதினம் தொடக்கம் சேவை யில் ஈடுபடும் என யாழ்.பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகூடத்தில் சேவை புரிவதற்கான வைத்திய தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவர் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையிலிருந்து நியமிக்கப்பட்டுள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் ஆய்வுகூட வசதிகள் இல்லாத வைத்தியசாலைகளில் கிரம முறையில் ஆய்வு கூட வசதிகள் பொது மக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

நாளை மறுதினம் அச்சுவேலியிலும், மறுநாள் சாவகச்சேரியிலும், புதன்கிழமை ஊர்காவற்துறையிலும், வியாழக்கிழமை கோப்பாயிலும் மறுநாள் வேலணையிலும் இது நடைபெறவுள்ளது.

# கடற்தொழிலாளர்களுக்கு எரிபொருள் வழங்க கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு

யாழ்ப்பாணம்

கடற்தொழிலாளர்கள் தமக்குத் தேவையான எரிபொருட்களைப் பெற்றுக்கொள்வதற்கு பிரதேச கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம், சமாசங்கள் ஊடாக ஏற்பாடு செய்துள்ளதாக யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவு சம்மேளனம் தெரிவித்துள்ளது.

குடாநாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து யாழ். அரச அதிபரிடம் சம்மேளனம் விடுத்துள்ள வேண்டுகோளுக்கமைவாகவே இந்த ஏற்பாடு செய்யப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் 7 பிரதேச கடற்தொழிலாளர் சமாசங்கள் ஊடாக மீனவர்கள் தமக்குத் தேவையான எரிபொருட்களை அந்தந்த பிரதேச பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கமைவாக முதற்கட்டமாக 30 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணெய்யும், 2 ஆயிரத்து 500 லீற்றர் பெற்றோலும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்துக்கு வழங்கப்பட்டது.

குடாநாட்டில் ஏற்பட்ட எரிபொருள் பற்றாக்குறை காரணமாக மீனவர்கள் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதை அடுத்து அரச அதிபரிடம் சம்மேளனம் விடுத்த வேண்டுகோளின் பேரிலேயே இந்த எரிபொருள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பூர்த்தியாகாத வீதி புனரமைப்பு பொதுமக்கள் விசனம் தெரிவிப்பு

சுழிபுரம்

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட சுழிபுரம் குறுக்கு வீதி புனரமைப்பு முழுமையாக்கப்படாததையடுத்து அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட கிராமங்களான பண்ணாகம், சுழிபுரம் போன்றவற்றை இணைப்பதாக சுழிபுரம் குறுக்கு வீதி அமைந்துள்ளது.

ஆனால், அந்த வீதி தற்போது திருத்தப்பட்ட போதும் சுமார் 350 மீற்றர் நீளமான பகுதி திருத்தப்படாமல் இருப்பதால், அதனூடாக போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர்.

இந்தப் பாதை சத்தியகாட்டுப் பிரதான சந்தை, பறாளை முருகன் கோவில், பறாளை வயல்வெளி, திருவடிநிலை சுடலை என்பவற்றுக்கு செல்லும் பிரதான வீதியாகவும் அமைந்துள்ளது.

எனவே திருத்தப்படாதிருக்கும் வீதியின் குறித்த பகுதியை திருத்தித் தருமாறு சம்பந்தப்பட்டவர்களிடம் அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (12)

# நயினை நாகபூசணி கொடியேற்றம்

யாழ்ப்பாணம்

நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் காலை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

பக்தர்களின் நன்மைகருதி வழமைபோல் இந்த முறையும் போக்குவரத்துசேவை, மோட்டார் படகுசேவை, தொண்டர் சேவை, சாரணர்கள், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் சேவை என்பன ஒழுங்கு செய்யப்படவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

# கால்நடை உற்பத்திக்கு 5 லட்சம் ரூபா ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்

கால்நடை உற்பத்திகளை அபிவிருத்தி செய்வதற்கென வடமராட்சிப் பிரதேசத்துக்கு யூ.என்.டி.பி நிறுவனம் 5 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

வடமராட்சிப் பிரதேசத்துக்கான கால்நடை அபிவிருத்திக்கான திட்டங்களை வடமராட்சி கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

பால் பதனிடல், ஜூஸ் தயாரித்தல், யோக்கற் தயாரித்தல் போன்ற திட்டங்கள் இதன் மூலம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

ஏற்கனவே, குளிரூட்டி, அலுவலகத் தளபாடங்கள், பால் கொண்டு சென்று விநியோகிப்பதற்கான சைக்கிள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தி திட்டங்களுக்கான முதற்கட்டமாக 3 இலட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# முன்பள்ளி அமைக்க அடிக்கல் நாட்டல்!



கிளிநொச்சி

கிளிநொச்சி - கண்டாவளைப் பிரதேசத்திலுள்ள கோரக்கன்கட்டு ஊரியான் கிராமத்தில் புதிய முன்பள்ளி நிறுவுவதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஐக்கிய நாடுகள் சபையின் கப்பிற்றர் நிறுவனத்தினதும், வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத்தினதும் இணைந்த நிதிப்பங்களிப்புடன் இந்தப் புதிய முன்பள்ளி அமைக்கப்படவுள்ளது.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12 மணியளவில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் முன்பள்ளிக் கல்வி பாட்டுத் திட்ட உதவியாளர் த.சுசிகரன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

முன்பள்ளிக்கான அடிக்கல்லை ஊரியான் கிராமசேவையாளர் சு.கேதீஸ்வரன், கப்பிற்றர் நிறுவன நகர முகாமையாளர் சண்முகலிங்கம், மாவீரர் மேஜர் இரட்ணத்தின் தந்தையார் க.சுப்பிரமணியம் ஆகியோர் நாட்டி வைத்தனர்.


கருத்துரைகளை சு.கேதீஸ்வரன், சண்முகலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர்.

கோரக்கன்கட்டு ஊரியான் கிராமமானது போர்ச்சூழலாலும், சமூக பொருளாதார ரீதியாகவும் மிகவும் பின்தங்கியதொரு கிராமமாகும்.

தற்போது இந்தக் கிராமம் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் புனரமைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# படையினரின் கொலை வெறியை மறுப்பது அவர்களின் செயலுக்கு ஊக்கமளிக்கிறது

## செல்வம் எம்.பி-ஐ.நா செயலருக்கு கடிதம்



கிளிநொச்சி

அண்மையில் யாழ்.மாவட்டம் அல்லைப்பிட்டிக் கிராமத்தில் கடற்படையினரதும், அவர்களுடன் சேர்ந்து இயங்குபவர்களாலும் நடத்தப்பட்ட படுகொலைகளின் பிற்பாடு அதனை உடன் மறுதலித்து கொழும்பிலிருந்து அறிக்கை விடப்பட்டதும், அதனையடுத்து இலங்கைப் பொலிஸாரிடம் விசாரணை ஒப்படைக்கப்பட்டதும் விசாரணை அறிக்கையிலும், கடற்படையினருக்கும் அந்தச் சம்பவத்தில் தொடர்பில்லை எனத் தெரிவித்ததுமே - தோமஸ்புரியில் நடந்தேறிய படையினரின் வெறியாட்டத்துக்கு ஊக்கம் கொடுத்துள்ளது என்பதே மக்களது அபிப்பிராயமாகும் என நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஐ.நா. செயலாளர் கொபிஅனானுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது -

இலங்கையில் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த வங்காலை தோமஸ்புரியைச் சேர்ந்த நால்வர் கடந்த 9 ஆம் திகதி இலங்கைப் படையினரின் காட்டுமிராண்டித் தனமான சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும், காம வெறிக்கு இரையாக்கப்பட்டும் பலிக்கடாக்களாய் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கொலைச் சம்பவத்தையடுத்து, பாதுகாப்பு அமைச்சு கொலை நடந்து ஒரு சில மணிநேரத்தில் எந்தவித தயக்கமும், விசாரணையுமின்றி இந்தச் சம்பவத்துக்கும் தமது படையினருக்கும் எந்தவித தொடர்பும் இல்லை எனவும், தமது படையினர் மிகவும் உத்தமமானவர்கள் எனவும் இப்படிப் பட்ட செயற்பாடுகளில் அவர்கள் இறங்கமாட்டார்கள் எனவும் கூறி கொழும்பில் படையினருக்கு வக்காளத்து வாங்கி அறிக்கை விடுத்தது.

ஆனால், 100 வீத பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த அரச படைகளால் அவர்கள் கட்டுப்பாட்டினுள் உள்ள பகுதிகளில் வாழும் தமிழ் மக்களது நிலைப்பாடு எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது எவரும் ஊகித்தறிந்து கொள்ளக்கூடிய ஒன்றாகும். இலங்கைப் படையினரால் தமிழர் வாழும் பகுதிகளில் தமிழ் ஆண், பெண், குழந்தைகள் மேல் அட்டூழியங்கள் நடந்தபோதெல்லாம் அதை உலக நாடுகளின் கவனத்திலிருந்து மூடி மறைக்கும் நோக்கத்தில் அறிக்கைகளை செய்தி ஊடகங்கள், இணையத்தளங்கள் ஊடாக அறிக்கை விடுவது வழக்கமான ஓர் நிகழ்வாக அமைந்து விட்டது.

இது மட்டுமன்றி சித்திரவதைக்கும், கற்பழிப்புக்கும் உள்ளாக்கப்பட்டவர்கள் அனைவரும் அரச படையினரின் உளவாளிகள் என புதிய நாமம் சூட்டப்பட்டு, தமிழீழ விடுதலைப்புலிகள் தான் இந்தப் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் என அறிக்கை மூலம் உலக நாடுகளையும், தென்பகுதி மக்களையும் திசைதிருப்ப எத்தனிப்பதும் தற்போதைய அன்றாட நிகழ்வுகளாகும்.

அமைச்சு அதிகாரிகளின் இப்படிப் பட்ட அறிக்கைகள் படையினருக்கு ஊக்கம் கொடுப்பதாகவே அமைந்துள்ளது. படையினரின் அட்டூழியங்களில் வங்காலையைச் சேர்ந்த மூர்த்தி மாாட்டீன் (வயது 35), அவரது மனைவி மேரி மெக்டலின் (வயது 27), மகள் ஆன்லக்சிகா (வயது 09), மகன் ஆன் லக்சன் (வயது 07) ஆகியோர் கொல்லப்பட்டனர்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள சகல தமிழ்க் கிராமங்கள் அனைத்திலும் மூலை முடுக்குகளெல்லாம் அரச படைகள் குவிக்கப்பட்டிருப்பது போல், தோமஸ்புரி வங்காலைக் கிராமத்தைச் சுற்றிவர படைகளின் காவலரண்கள் காணப்படுகின்றன. அத்துடன் பொது மக்களது வீடுகள் கூட ஆயுதப் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான நிலையில் ஆங்காங்கே அவர்களின் மேல் நடைபெற்ற அசம்பாவிதங்களின் பிற்பாடு-தம் கோபத்தையெல்லாம் ஆயுதப் படையினர் பொது மக்கள் மேல் தாக்குதல்களை நடத்துவதன் மூலம் தீர்ப்பதைக் கண்ணுற்று - ஆயுதப் படையினரின் இருப்பிடங்ளை அண்டியுள்ள பகுதிகளில் வாழும் மக்கள் பயத்தின் நிமித்தம் தேவாலயத்திலும், உறவினர்களின் வீடுகளிலும் தங்குவது வழமையாகிவிட்டது. அன்றைய தினம் வேலைக்குச் சென்ற குடும்பத் தலைவன் வீடுவந்து சேர நேரமாகியதன் காரணத்தால் இந்தக் குடும்பம் அன்றைய இரவு தமது வீட்டில் இருக்க நேரிட்டது.

எப்போது சந்தர்ப்பம் கிடைக்கும், எப்போது தமது இச்சையைத் தீர்த்துக் கொள்ளலாமெனக் காத்திருந்த கயவர்களுக்கு அது நற்சந்தர்ப்பமாய் அமைந்துவிட்டது.

அரசாங்க பேச்சாளர் இல ங்கை அரச படைகள் வானதூதர்கள் போன்று மாசற்றவர்கள் என உலக நாடுகளை ஏமாற்றும் வகையில் அறிக்கைகளை வெளியிடலாம்.

ஆனால், இந்த நாசகார வேலைக்கு அங்கு குடிகொண்டிருந்த அரச ஆயுதப்படையினரே காரணம் என வங்காலை தோமஸ்புரி வாழ் மக்களனைவரும் ஆணித்தரமாக நம்புகின்றனர் என அவர் அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மன்னார் மாவட்டத்தில் புதிய குரு முதல்வர் நியமனம்

மன்னார்

மன்னார் மாவட்டத்தின் புதிய குரு முதல்வராக அருட்திரு விக்ரர் சோசை அடிகளார், மன்னார் மாவட்ட ஆயர் இராயப்பு யோசேப் ஆண்டகையால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 25 வருடங்களாக மாவட்டத்தின் குரு முதல்வராகப் பணியாற்றிய அருட்திரு ஏ.சேவியர் குரூஸ் அடிகளார் தனது பணியிலிருந்து ஓய்வு பெறுவதையடுத்தே இந்தப் புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

வங்காலையைப் பிறப்பிடமாகக் கொண்ட புதிய குரு முதல்வர், மன்னார் மாவட்ட பொது நிலையினர் மற்றும் குரும்பணி ஆணைக்குழுவின் இயக்குநராகவும் கடமையாற்றியுள்ளார்.

# ஆத்திமோட்டை வீதி புனரமைப்பு ஆரம்பம்

கிளிநொச்சி

மன்னார் ஆத்திமோட்டையிலிருந்து கூராய் வரையான வீதி தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது.

பத்து கிலோமீற்றர் தூரம் வரையான இந்த வீதி ஜெகா நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் 75 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

மிக நீண்டகாலமாகத் திருத்தப்படாதிருந்த இந்த வீதி - தற்போது கிரவல் மண் போடப்பட்டு புனரமைக்கப்பட்டு வருவதால், அந்தப் பகுதி மக்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்.

இதேவேளை மன்னார் பரப்புக் கடந்தானில் இருந்து மடு வரையான வீதி பல வருடங்களாகப் புனரமைக்கப் படாமலுள்ளது.

15 கிலோமீற்றர் தூரம் வரையான இந்த வீதி 15 வருடங்களுக்கு மேல் புனரமைக்கப்படாமலுள்ளது. இந்த வீதியால் நாளொன்றுக்கு நூற்றுக் கணக்கான மக்கள் பிரயாணம் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது.(கு)

# 2 ஆம் கட்டமாக ஆயிரம் வீடுகள் மன்னார் மாவட்டத்தில் அமைப்பு

மன்னார்

உலக வங்கியின் நிதியுதவியுடன் வடக்கு - கிழக்கு வீடமைப்பு மீள் நிர்மாணத் திட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் இந்த வருடம் இரண்டாம் கட்டமாக 45 கிராமங்களில் ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப்படவுள்ளதாக மன்னார் மாவட்டப் பிரதித் திட்டப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இந்த வீடுகளை நிர்மாணிப்பதற்கான ஆரம்ப வைபவம் நானாட்டான் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் இந்தப் பகுதியைச் சேர்ந்த 154 பயனாளிகள் பங்கு பற்றினர்.

இந்த வீடமைப்புத் திட்டம் மன்னார் மாவட்டத்தில் கடந்த 2004 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

அந்த வருடம் ஆயிரம் வீடுகளும், 2005 ஆம் ஆண்டு 300 வீடுகளும் நிர்மாணிக்கப்பட்டன.

இந்த வருடம் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் ஆயிரம் வீடுகள் நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இரண்டாம் கட்டத்தின் முதல் அபிவிருத்தி வேலை நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

முதல் கட்ட அபிவிருத்தி வேலைகளை இந்தப் பகுதி மக்கள் குறிப்பிட்ட காலத்தில் பூர்த்தி செய்து பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விருந்துபசார நிகழ்வு!

வட்டக்கச்சி

கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக சிரேஷ்ட புதுமுக மாணவர்களுக்கான விருந்துபசார நிகழ்வு நேற்றுக் காலை 10 மணிக்கு ஒன்றிய வளாகத்தில் இடம்பெற்றது என கிளிநொச்சி மாவட்ட அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. (09)

# கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் திறக்கப்படாத பொதுச் சந்தை

கிளிநொச்சி

மன்னார் இலுப்பைக்கடவை பொதுச்சந்தைக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்ட நிலையிலும் இதுவரை திறந்து வைக்கப்படாமல் உள்ளதால், விவசாயிகளும், பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்தச் சந்தைக்கான கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, நான்கு மாதங்கள் கடந்துவிட்டன.

எனினும், இதனைத் திறந்து மக்களின் பாவனைக்கு விடுவதற்கு சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, கட்டி முடிக்கப்பட்ட இந்த விவசாய கட்டடத்தை விரைவில் திறப்பதற்கு ஆவன செய்யுமாறு விவசாயிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (கு)

# மல்லாவி யோகன் பயிற்சிப் பாசறையில் 2 ஆவது அணிக்கான பயிற்சி நிறைவு

கிளிநொச்சி

முல்லைத்தீவு - மல்லாவி யோகன் பயிற்சிப் பாசறையில் 200 இற்கும் மேற்பட்ட வீரர்களைக் கொண்ட இரண்டாவது பயிற்சி அணி பயிற்சியை முடித்து வெளியேறியது.

இவர்களுக்கான பயிற்சி நிறைவு நிகழ்வு நேற்று முன்தினம் யோகன் பயிற்சிப் பாசறையில் நடைபெற்றது. இதில் காலை நிகழ்வாக, பயிற்சி பெற்ற வீரர்களுக்கான போட்டி நிகழ்வுகள் வெகு சிறப்பாக நடைபெற்றன.

மாலையில் பயிற்சி மைதானத்தில் அமைக்கப்பட்ட இடத்தில் பொதுச் சுடரை பொருண்மிய மேம்பாட்டு துணைப் பொறுப்பாளர் சின்னண்ணா ஏற்றிவைக்க, தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் ஏற்றினார்.

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகள் மல்லாவி கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் அருந்தவம் தலைமையில் ஆரம்பமானது. இதில் கப்டன் யோகனின் திருவுருவப் படத்துக்கான ஈகச் சுடரை பயிற்சி ஆசிரியர் யாழ்நம்பி ஏற்றினார்.

மலர்மாலையை போராளி இசையழகன், போராளி ரதி ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செம்மணன் சிறப்புரையாற்றினார். பின்னர் நிகழ்வுகளில் வெற்றியீட்டிய வீரர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

இதேவேளை மாங்குளத்தில் மக்கள் படைக்கட்டு மானப்பயிற்சி நேற்று முன்தினம் தொடங்கியது. இந்தப் பயிற்சியில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் பயிற்சிகளைப் பெறுகின்றனர்.

மாங்குளம் வலயப் பொறுப்பாளர் புலியரசன் தலைமையில் இந்தப் பயிற்சி தொடக்க நிகழ்வு இடம்பெற்றது. (கு)

# திறப்பு விழா!

வட்டக்கச்சி

சேவாலங்கா மன்றத்தின் முல்லைத்தீவு மாவட்டச் செயலகத் திறப்பு விழா முள்ளியவளையில் இடம்பெற்றது.

நேற்றுமுன்தினம் காலை 10.30 மணிக்கு சேவாலங்கா திட்ட முகாமையாளர் காந்தன் தலைமையில் இந்த நிகழ்வு ஆரம்பமானது.

கட்டடத்தை ஜேர்மன் அன்ரோ அக்ஷன் நிறுவனப் பிரதிநிதி திறந்து வைத்தார். (09)

நமது ஈழநாடு

சிந்தனைக்கு!

பகைஎன்னும் பண்புஇ லதனை ஒருவன்
நகையேயும் வேண்டற்பாற் றன்று.

- திருக்குறள்

## நமது நோக்கு

# பேரழிவுப் பிரகடனம்!

சமாதானப் பேச்சுக்களில் இருந்து அரசாங்கம் விலகிக்கொள்ளவேண்டும் என்று ஜே.வி.பி. பொதுச்சபை தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. அத்துடன், நோர்வேயை 'எதிரி' நாடாகப் பிரகடனம் செய்யவும் அது கோரியிருக்கிறது.

அதேவேளை, கெப்பிற்றிக்கொல்லாவ தாக்குதலுக்குப் பின்னர் - போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகவேண்டும் என்றும் ஜே.வி.பி. கேட்டிருக்கிறது.

2002 ஆம் ஆண்டு செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்பாட்டுக்கு இப்போது உச்சக்கட்ட சோதனைக் காலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதான கூட்டாளியான ஜே.வி.பி. போர்ப்பிரகடனம் செய்யுமாறு கோரியிருக்கின்ற நிலையில், இலங்கை அரசு அடுத்து அதைத்தான் செய்யும் அல்லது செய்யவேண்டி இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இதற்கு முன்னர் மகிந்த - ஜே.வி.பி. கூட்டணி வரலாறாகட்டும், சந்திரிகா - ஜே.வி.பி. கூட்டணி வரலாறாகட்டும் எதை எடுத்துப்பார்த்தாலும் ஜே.வி.பியின் சொற்படிதான் அரசின் ஆட்சி நடந்துவந்திருக்கிறது.

கடைசியாக நடந்த சர்வகட்சிக் கூட்டத்தையே உதாரணத்துக்கு எடுத்துக்கொள்வோம்.

'பிரிக்கப்படாத ஒரு நாடு' என்ற கொள்கைப்படி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் என்ற பொருளிலேயே இந்த மாநாடு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், பிரிக்கப்படாத ஒரு நாடு, ஐக்கிய இலங்கை இவையெல்லாம் சமஷ்டியையோ, அதிகாரப் பகிர்வையோதான் சுட்டிக்காட்டுவதாகவும் - எனவே தாம் கூட்டத்துக்கு வரமுடியாது என்றும் ஜே.வி.பி. அறிவித்தது.

உடனடியாக ஜனாதிபதி மகிந்த விழுந்தடித்துக் கொண்டு ரில்வின் சில்வாவுடன் பேச்சு நடத்தி சர்வகட்சி மாநாட்டின் தொனிப்பொருளையே மாற்றியமைத்துக்கொண்டார்.

ஜே.வி.பிக்கு பயந்து சர்வகட்சி மாநாட்டின் தொனிப்பொருளை மாற்றும் அளவும் - எள் என்றால் எண்ணெயாக வடிந்து நிற்கும் மகிந்தவா ஜே.வி.பியின் பேச்சை மறுத்துக்கொண்டு போர்நிறுத்த உடன்பாட்டில் இருந்து விலகாதிருக்கப்போகிறார்?

நோர்வேயை எதிரி நாடாக பிரகடனப்படுத்தல், போர்நிறுத்தத்தை முறித்தல் என்று ஜே.வி.பி போடும் உத்தரவுகளுக்கு மகிந்த பணிந்து நடப்பாரேயானால் - அது நாட்டில் பேராபத்தை விளைவிக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

அதேவேளை, ஜே.வி.பியைப் புறக்கணித்து நடக்கும் நிலையில் மகிந்த இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

சமாதான முயற்சிகளை முன்னெடுத்த நோர்வேயை எதிரி நாடாகப் பிரகடனப்படுத்தி - யுத்தத்தைப் பிரகடனம் செய்ய அரசைத் தூண்டும் கூட்டாளிகள் யார் என்பது இப்போது தெளிவாகி வருகிறது.

நாட்டில் யுத்தத்தைத் தூண்டுபவர்கள் யார் என்ற உண்மை இப்போது சர்வதேசத்துக்குப் புரிந்திருக்கும். நாட்டை யுத்தத்துக்குள் தள்ளிவிட்டு அதன்மூலம் நன்மை அனுபவிக்கத் திட்டமிடும் சக்திகள் தோலுரிக்கப்படும் நிலை உருவாகி விட்டது.

இதுவரை காலமும் கட்டவிழ்த்துவிட்ட வன்முறைகளில் சூத்திரதாரிகளை இப்போது உணர்ந்து கொள்ளமுடிகிறது. பகிரங்கமாகப் போரைப் பிரகடனப்படுத்தக் கோருபவர்கள்தான் இந்த வன்முறைகளின் சூத்திரதாரிகள்.

அதாவது, அரசும் அதன் கூட்டணிகளுமே போரை நோக்கி நாட்டைக் கொண்டுசெல்கின்றன என்பதுதான் உண்மை. இதை சர்வதேசம் இப்போதாவது புரிந்துகொண்டால் சரி.

267, Navalar Road,
Jaffna.
T.P.021-2225107
Fax - 021 - 2223922
Web - www.eezhanaadu.com
email-eezhanaadu @ yahoo.com

நாடும் நடப்பும்



# ஆளுநர் சபை பரிந்துரைப்படி அமையாத கிளைகளுக்கு கூட்ட அழைப்பு இல்லை!

## செஞ்சிலுவை சங்க யாழ்.கிளை தெரிவிப்பு

யாழ்ப்பாணம்

இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் காரைநகர், ஊர்காவற்துறை சங்கங்களை தாம் புறக்கணிக்கவில்லையெனவும், மாறாக அவை சரியாக ஆளுநர் சபையின் பிரகாரம் ஸ்தாபிக்கப்படாமையினாலேயே அவற்றை ஆண்டுப் பொதுக்கூட்டத்துக்கு பங்குபற்ற தகுதியற்றனவாக கணிக்கப்படுவதாகவும் - இலங்கை செஞ்சிலுவை சங்கத்தின் யாழ்ப்பாணக்கிளை அனுப்பி வைத்துள்ள விளக்க கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

கொழும்பு தலைமையகத்து கட்டளைக் கிணங்க ஆண்டுப் பொதுக் கூட்ட முதல் அறிவித்தல் மே 05 ஆம் திகதியும், இறுதி அறிவித்தல் ஜூன் 10ஆம் திகதியும் அனுப்பப்பட்டன.

இதனால் இது திட்டமிட்டோ அல்லது செஞ் சிலுவைக் கோட்பாடுகளுக்கு எதிரானதாகவோ அல்லது மனிதநேய நோக்கத்தை அவமதிக்கும் விடயமோ அல்ல. இது விடயமாக செஞ்சிலுவை தலைமையகத்துக்கும் ஏனைய நிறுவனங்களுக் கும் அறிவித்துள்ளோம். மூடி மறைக்கும் எண்ணம் எள்ளளவும் எமக்கில்லை. இது விடயமாக இவ்விரு பிரிவுகளுக்கும் விபரமாக எழுதி அனுப்பப்பட்டுள்ளது.

கடந்த வருடம் நவம்பர் 19 ஆம் திகதி நடைபெற்ற ஆளுநர் சபைக் கூட்டத்தில் ஊர்காவற்துறை/காரைநகர் பிரிவு தொடர்பாக மூன்று உறுப்பினர் கொண்ட குழு இதனை கையாள்வதற்கு பரிந்துரைக்கப்பட்டது.

இந்தக் குழுவில் வேலணை தலைவர் ஆ.சபாநாதன், பேராசிரியர் கா. குகபாலன், மத்திய ஆளுநர் சபை உறுப்பினர் சோ.விக்னேஸ்வரன், தலைவர் ஊர்காவற் துறை பிரிவு என்போர் நியமிக்கப்பட்டனர். (அரசாங்க நிர்வாகத்துக்கு அமைய ஊர்காவற்துறை பிரிவு, காரைநகர் பிரிவு என இரண்டாக பிரிக்கப்பட் டுள்ளது) இம்மூவர் கொண்ட குழு தமது செயற்பாட்டை தொடங்க முன் சோ.விக்னேஸ்வரன் தன்னிச்சையாக ஆளுநர் சபைக்கூட்ட தீர்மானத்துக்கு முரணாக காரைநகர்/ஊர்காவற்துறை பிரிவு நிர்வாக குழுக்களை அமைக்கும் வேலைகளில் முழுமூச்சாக ஈடுபட்டு வந்ததை ஆளுநர் சபை அறிய வந்தது. இதன் காரணமாக கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற கிளைக்குழுக் கூட்டத்தில், சோ.விக்னேஸ்வரன் கிளைக்குழுக் கூட்ட தீர்மானத்துக்கு மாறாக செயற்பட்டு இந்தப்பிரிவுகளை உருவாக்கியதன் காரணமாக இவ்விரு பிரிவுகளின் செயற்பாடுகளைத் தற்காலிகமாகத் தடைசெய்து நாளை நடைபெறவுள்ள ஆண்டுப் பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றுவதை தடைசெய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதன் காரணமாக எமது கிளை தனது முடிவில் உறுதியாக நிற்பதுடன் இந்தவிடயமாக எவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டாலும் உறுதியாக எதிர்கொள்ளவும் ஆயத்தமாக உள்ளது.

கிளைக்குழுவின் தீர்மானத்துக்கு எதிராக வேறு எந்த அமைப்புகளும் செயற்பட முடியாது. செஞ்சிலுவை சங்கயாப்பை அனுசரித்தே கிளைக்குழு செயற்படுகிறது. இவ்விரு பிரிவுகளுடன் சம்பந்தப்பட்ட விடயங்களும், ஆண்டுப் பொதுக்கூட்டமும் சகல சுற்று நிரூபங்களுக்கும் அமைய செயற்படுகிறது.

மேலும் இது விடயமாக கதைத்து ஒரு முடிவுக்கு வருவதற்காக விக்னேஸ்வரனை (முன்னாள் ஊர்காவற்துறை பிரிவு தலைவர், கிளைப்பொறுப்பாளர்) ம்ாதாந்த கூட்டத்துக்கு வரும்படி பல முறை எழுத்து மூலமாகவும், தனிப்பட்ட முறையிலும் அழைப்பு விடுத்து 4 -5 கூட்டங்களுக்கு தொடர்ந்து வரவில்லை. அவர் வந்திருப்பின் இது சுமுகமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கும்.

சமூக சேவை செய்பவர்கள் தங்களுக்கு இட்ட பணியை செவ்வனே செய்ய வேண்டும். மக்கள் சேவைக்காக தம்மையே அர்ப்பணிக்க முன்வரவேண்டும். இந்தக் கருத்தையே கிளை மிக கடினமாக கடைப்பிடித்துவரும் கொள்கையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்மராட்சி ஆசிரியர்களுக்கு செயலமர்வும், கருத்தரங்கும்!

சாவகச்சேரி

தென்மராட்சி கல்வி வலய ஆசிரியர்களுக்கான கணிதம், தமிழ்,சங்கீதம் ஆகிய பாடங்களுக்குரிய கருத்தரங்கும்,செயலமர்வும் இன்று நடைபெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இன்று காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தரம் 8 இற்கான கணித பாடக் கருத்தரங்கு நடைபெறும்.எதிர்வரும்24, 25 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தரம் 8இற்கான தமிழ் மொழி பாடக் கருத்தரங்கு நடைபெறும்..

இன்றும்,நாளையும் காலை 8.30மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை தரம் 10, 11 இற்கான சங்கீத பாடக் கருத்தரங்கு நடைபெறும்.

இந்தக் கருத்தரங்குகள் அனைத்தும் சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன. எனவே இந்தக் கருத்தரங்குகளில் பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர்களைப் பங்குபற்றுமாறு அவர் கேட்டுள்ளார்.

# வெளிவாரி மருந்தாளர்களுக்கு இன்றும்,நாளையும் பரீட்சை!

யாழ்ப்பாணம்

வடக்கு - கிழக்கு மாகாண சுகாதார அமைச்சு நீர்ப் திட்டத்தின் அனுசரணையுடன் நடத்திய வெளிவாரி மருந்தாளர்களுக்கான இரண்டு வருட கால பயிற்சியின் இறுதிப் பரீட்சைகள் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 57 பேரும், திருகோணமலையிலிருந்து 50 பேரும், மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களிலிருந்து 63 பேருமென மொத்தம் 170 பேர் இந்தப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

நடத்தப்படவுள்ள பரீட்சை யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்ட பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளதாகவும் பரீட்சார்த்திகளுக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்ட அனுமதி அட்டைகள் இந்தப் பரீட்சைக்கு செல்லுபடியாகுமெனவும் மாகாண இணைப்பாளர் பத்மமகேஸ்வரன் தெரிவித்தார். இன்றைய தினம் எழுத்துப் பரீட்சையும், நாளை செய்முறைப் பரீட்சையும், வாய்மூலப் பரீட்சையும் நடைபெறவுள்ளன.

இந்தப் பரீட்சைகள் கடந்த ஏப்ரல் மாதம் 8, 9 ஆம் திகதிகளில் நடைபெற இருந்த போதிலும் திருமலையில் ஏற்பட்ட அசாதாரண சூழல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சரத் பொன்சேகா அடுத்தவாரம் கடமைக்கு


கொழும்பு

இராணுவத் தலைமையகத்தில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா அடுத்த வாரம் கடமைக்கு சமூகமளிப்பாரென இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

தொடர்ந்து சிகிச்சை பெற்று வரும் அவர் வைத்தியசாலையிலிருந்து உத்தரவுகளைப் பிறப்பித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, இராணுவத் தளபதியின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அவருக்கு சிகிச்சையளித்து வரும் வைத்தியர் தெரிவித்ததாக தகவல்கள் தெரிவித்தன.

# மீண்டும் ஒரு வெளிநாட்டுப் படை இலங்கைக்குத் தேவையா?



ஐ.நாவின் நியதிச்சட்டம் ஏழாவது சரத்துக்கமைய ஏதாவது நாட்டின் உள்நாட்டு பிரச்சினைகளின் போது, வேறொரு நாட்டின் தலையீடு விசேடமாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

தலையீடு என்பதின் மூலம் கருதப் படுவது இராஜதந்திரீக அல்லது யுத்த ரீதியில் செய்யப்படும் அழுத்தங்களாகும். இந்த அழுத்தங்களை விரைவுபடுத்தும் சுவரொட்டிகள் அண்மையில் நாடு முழு வதும் ஒட்டப்பட்டிருந்தன. 'பொய் சமாதானத் தின் போர்வையில் வெளிநாட்டுப் படைகளை வரவழைப்பதன் மூலம் நாட்டின் இறைமைக் குத் தீங்கு ஏற்படுத்து வதை நிறுத்து' என்று கருத்து இதில் தெளிவானது.

இதன்படி இலங்கைக்கு மீண்டும் ஒரு தடவை வெளிநாட்டுப் படைகளை வரவழைக் கும் ஏதாவதொரு செயற்பாடு நிலவுகின்றதா? என்ற பிரச்சினை எழும்புகிறது. எப்படி வெளிநாட்டுப் படையொன்று ஏதாவதொரு நாட்டின் நடவடிக்கையில் தலையிடுவது குறித்து தீர்மானம் எடுப்பதற்கு அதிகாரம் உள்ளது யாருக்கு? அது நிகழ வேண்டியது எந்தவிதமாக என முதலில் ஆராய வேண்டும்.

வெளிநாட்டுப் படைகளின் தலையீடு இரண்டு சந்தர்ப்பங்களில் நிகழும். இதில் முதலாவது நாடுகளுக்கிடையே நிகழும் யுத்தத்தைக் கூற முடியும். உதாரணமாக 1949 மற்றும் 1965இல் நடைபெற்ற இந்திய - பாகிஸ்தான் யுத்தத்தின்போது - ஐ.நா கண்காணிப்புக்குழு இந்த நாடுகள் இரண்டுக்குமிடையே சர்வதேச எல்லையை ஸ்தாபித்தது.

இந்த யுத்தத்துக்கு அடிப்படைப் பிரச்சினையாக ஜம்மு மற்றும் காஷ்மீர் பிர தேசம் தொடர்பான நாட்டு எல்லை குறித்து நிலவும் சிக்கல் என்பதுடன், இரு நாடுகளுக்கு மிடையே போர் நிறுத்தத்தைக் கண்காணிக்க கண்காணிப்புக்குழு ஈடுபடுத்தப்பட்டது. இந்தக் குழு தற்போதும் தனது நடவடிக்கையில் ஈடு படுவதுடன், அவர்கள் ஐ.நா.இந்திய - பாகிஸ் தான் யுத்த கண்காணிப்புக்குழு (U.N.M.P.C.I.P) என அழைக்கப்படுகிறது.

இரண்டாவது - நாட்டில் நிலவும் உள் நாட்டுக்கிளர்ச்சி இதன்போது அந்த நாட்டில் யுத்த ரீதியாக செயற்படும் அனைத்து தரப் பினரதும் அனுமதி அதற்கு அவசியமாகும். எவ்வாறிருப்பினும் ஐ.நா தலையிடும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஐ.நாவின் மத்திய சபையின் அல்லது பாதுகாப்புச் சபையின் அனுமதி இருக்க வேண்டும்.

உலக சமாதானத்துக்காக நிறுவப்பட்ட ஐ.நா அமைப்பு யுத்த ரீதியில் பங்கேற்று உலக சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்து எழுந்தது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின் பின்பே அதன்படி இங்கு யுத்த ரீதியாக தலை யிட வேண்டிய சந்தர்ப்பத்தை நான்கு வகை யாக பிரிக்கலாம்.

வரையறை செய்யப்பட்ட யுத்தம் (Limited war) பிரதான உள்நாட்டு பாதுகாப்புச் செயற்பாடு (Major intenal security operation) இடைநடுவில் இடம் பிடித்தல் (inter position operation) கண் காணிப்புக்குழு (Obsever group) என்பனவாகும்.

வரையறை செய்யப்பட்ட யுத்த மென் பது -வரை யறை செய்யப்பட்ட பிரதேசத்துக்குள் - வரையறை செய்யப்பட்ட ஆயுதங்களால்* மாத்திரம் செய்யப்படும் யுத்தமாகும்.

வடக்கு மற்றும் தென் கொரியாவை மீண்டும் ஒன்றி ணைக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்ட செயற்பாட்டை இதற்கு உதாரணமாக காண்பிக்கலாம்.

பிரதான உள்நாட்டு பாதுகாப்பு செயற் பாடென்பது - யுத்தத்தின் போது அங்கீகரிக்கப் பட்ட ஆயுதங்கள் பாவிக்கப்படாததுடன், அதிகமாக உள்நாட்டு யுத்தத்தின்போது எழு கின்ற நிலைமை எனக் காண்பிக்க முடியும். கொங்கோவில் உள்நாட்டு கிளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொண்ட நடவடிக் கையை இதற்கு உதாரணமாகக் காட்டலாம்.

இடைநடுவில் இடம் பிடித்தல் என்பது - பூமியின் எல்லையில் சண்டையிலுள்ள தரப்பினருக்கு வரையறை செய்து, சண்டை மீண்டும் ஏற்ப

> **'இலங்கைக்கு மீண்டும் ஒரு வெளிநாட்டுப்படை தேவையா?' என்ற தலைப்பில் முன்னாள் இராணுவ அதிகாரி லெப்.கேணல் சுசந்த செனிவிரட்ண 'லங்கா தீப' நாளிதழில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்**

டாத வண்ணம் செய்யப்படும் செயற்பாடுகள். இதற்கு சைப்பிரஸில் - கிரேக் சைப்பிரஸை சேர்ந்தவர்கள் மற்றும் துருக்கி சைப்பிரஸை சேர்ந்தவர்களுக்குமிடையே உள்நாட்டில் நிகழும் பிரிவினைவாத கிளர்ச்சியை காட்டலாம்.

கண்காணிப்புக்குழு என்பது மோதலில் ஈடுபட்டுள்ள தரப்பினரிடையே போர் நிறுத்த நடவடிக்கைகளை கண்காணிப்பது. இந்தியா வின் காஷ்மீரின் இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தை உதாரணமாகக் காட்டலாம்.

மேலே தெரிவித்த அனைத்து நடவடிக்கைகளின் நோக்கம் சர்வதேச சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் உலகத்தில் நிகழும் போராட்ட கிளர்ச்சி களை அரசியல் ரீதியாக மாற்றம் பெறச்செய் வதற்கு இயலுமான சூழலை படைப்பதுவே.

இதன்படி இலங்கை, வெளிநாட்டுப் படைகளின் முதல் அனுபவத்தைப்பெற்றுக் கொண்டது 1987 ஆம் ஆண்டில் இந்திய அமைதிப்படை வந்ததன் பின்பே. எப்படி இந்திய அமைதிப்படையின் வருகை ஐ.நாவின் நியதிச் சட்டத்துக்கு உடன்பாடா னதா? என ஆராய்ந்து பார்ப்போம். அதற்காக இந்திய அமைதிப் படையின் வருகையை மீட்டுப் பார்ப்பது உசிதமானது.

இந்திய அமைதிப் படையின் வருகைக்கு அழுத்தமான முக்கிய காரணமாக இலங்கை இராணுவம் மேற்கொண்ட வடமராட்சி ஒப்பரேஷன் லிபரேசன் அமைகிறது. இந்த நடவடிக்கையின் முதற்கட்டமாக பலாலி பிரதேசத்திலிருந்து பருத்தித்துறை வரை பரந்த வடமராட்சி பிரதேசம் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. அதற்கு 6 நாட்கள் கழிந்தன.

இரண்டாவது நடவடிக்கையாக பலாலிப் பிரதேசத்திலிருந்து அச்சுவேலி நகர் ஊடாக யாழ்.நகர் நோக்கிய பகுதி கைப் பற்றப்பட்டது.

யாழ்ப்பாண நகரம் வரை செல்வதற்குத் தேவையான சிப்பாய்களின் அளவு போதுமானதாக இருந்தும், அச்சுவேலி நகரிலிருந்து 2 கிலோமீற்றர் தூரம் சிப்பாய்கள் முன்னே செல்லும் போது ஒரே தடவையில் அந்த நடவடிக்கையை நிறுத்துமாறு உயர் தலைமையகத்திலிருந்து உத்தரவு கிடைத்தது.

இதற்கமைய அதுவரை கைப்பற்றிய பிரதேசங்களில் குறிப்பிட்டளவு படையினரை தங்கவைத்துவிட்டு, ஏனைய படையினர் பலாலி படைமுகாமுக்குத் திரும்பிச் சென்றனர். நிகழ்ந்தது என்னவென சில படை அதிகாரிகளுக்குக் கூட தெரியாதிருந்தது.

இந்தியாவின் மூலம் குறிப்பிட்டளவு அழுத்தம் கொடுக்கப்படுவதாக செய்தி பரவியது.

எவ்வாறா யினும் படை யினர் பலா லிக்குத் திரும்பிய இரண்டு நாட்க ளில் இந்திய விமானங்கள் மூலம் உலர் உணவுப் பொருட்கள் ஆகாயத்தி லி ருந்து போடப் பட் டதை காணக்கிடைத்தது.

இந்தச் செயற்பாடு அவ்வாறே நின்று போனது. அதுவரை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட பிரதேசங்களில் அதன்போது பங்கேற்ற படையினர் பின்னர் அந்த இடங்களிலேயே தங்க வைக்கப்பட்டனர்.

அதனையடுத்து 4 நாட்களுக்குப்பின் திடீரென பலாலி விமான நிலையத்துக்கு இந்திய விமானங்கள் வந்திறங்கின. அத்துடன் காங்கேசன்துறை துறை முகத்துக்கு அண்மையில் கடற்பிரதேசத்தில் இந்திய கடற்படையின் தரையிறங்கும் படகுகள் (Landing craft) காணக் கிடைத்தது. இவ்வாறு இந்திய அமைதிப்படை கிரம்ம் கிரமமாக வட பகுதியில் இடம் பிடித்துக் கொண்டது.

இந்த நிகழ்வு ஐ.நாவின் நியதிச் சட்டத்தின் ஒரு நாட்டில் கிள ர்ச்சி தொடர் பாக விதிக் கப்பட்டு ள்ள ஷரத்துக்கு அனு கூலமானதா? இந்திய அமைதிப் படையின் வருகையை விமர்



சகர்கள் பல்வேறு விதமாக தெரிவித்தனர். சிலர் ஆக்கிரமிப்பு என்றனர். வேறு சிலர் அது அப்போதிருந்த அரசாங்கத்துக்கு உதவியாக வந்தது என்றனர். மற்றும் சிலர் அது விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்வதற்காக வந்ததெனத் தெரிவித்தனர்.

இவ்வாறு எந்தக் கருத்துக்கள் இருந்தாலும், இந்திய கோணத்தில் பார்க்கும் போது அது நீதியான வருகை. இந்தியப் பிரதமராக இருந்த நேருவின் சமாதான எண்ணக் கருவுக்கமைய யாராவது ஒருவர் சமாதானத்துக்காக நடவடிக்கை எடுப்பாராயின் முழு உலகமும் அதில் பங்களிப்புச் செய்ய வேண்டும்.

அதற்கமைய அந்த சமாதானக் கொள்கை 3 முக்கிய அடையாளங்களைக் கொண்டதாக உள்ளது.

அவையாவன -

***யுத்தத்தால் ஏற்படும் அழிவுகளைத் தடுக்க முடியும்.***

***நேர்மையான கடும் அர்ப்பணிப் புடன் யுத்தத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.***

***ஏதாவதொருவிதமாக யுத்தம் ஆரம்பித்தால் அதனை நிறுத்து வதற்குத் தேவையான நடவடிக் கைகளை மேற்கொள்ள முடியும் என்பனவாகும்.***

இதனை அடிப்படையாகக் கொண்டு சமாதானத்துக்காக இந்தியக் கொள்கை வகுக்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக இந்தியத் தலையீடு, ஐ.நாவின் உள்நாட்டு கிளர்ச்சியின்போது தலையிடுவது பொருத்தத்துடன் கூடிய சூழலின் மீதும் நீதியானதென கூற முடியும். இந்திய அமைதிப்படையை இலங்கைக்கு அனுப்புவதற்கு முன்னர், அப்போதைய அரசாங்கத்தினதும், விடுதலைப் புலிகளின் அனுமதியும் பெறப்பட்டிருந்தது.

ராஜீவ் - ஜே.ஆர் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை இதனை உறுதிப்படுத்துவதற்குரிய காரணியாக அமைந்தது. இதற்காக விடுதலைப் புலிகள், தமது விருப்பத்தை வெளிப்படுத்தினார்களா? என்பதை ஆராய்ந்து பார்ப்பது பெறுமதியானது.

அவ்வாறு விடுதலைப் புலிகள் தமது விருப்பத்தை வழங்கி இருந்தமையை உறுதிப்படுத்தும் சிறியதொரு நிகழ்வு உண்டானது.

இந்திய அமைதிப்படையினர் காங்கேசன்துறை துறைமுகத்தில் இறங்கிய சில மணிநேரங்களின் பின்னர், காலாற்படையின் கட்டளையிடும் அதிகாரி உட்பட குழுவினர், விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை சந்திப்பதற்காக யாழ். நகருக்கு சென்றனர். சிலமணி நேரங்களின் பின்னர் அவர்கள் மீண்டும் திரும்பி வந்தனர். இதன்பின் ஹாபர் வியூ எனும் ஹொட்டலில் இராணுவ அதிகாரிகள் தங்கினர். மேலும் சில மணி நேரம் கழிந்தன.

அப்பொழுது விடுதலைப் புலிகள் முன்வரிசைத் தலைவர்களில் ஒருவரான குமரப்பா, மாவிட்டபுரம் இலங்கை இராணுவ முகாமுக்கு வந்தார். அங்கு வந்த அவர் இலங்கை இராணுவத்துடன் தனக்கு எதுவித பேச்சும் இல்லையெனினும், தான் இந்திய அமைதிப்படையின் கட்டளையிடும் அதிகாரியை சந்திக்க வந்ததெனவும் தெரிவித்தார்.

(தொடரும்...)

**தமிழில் - நாடோடி**

# கவுணாவத்தை வேள்வி நடத்த படையினரால் அனுமதி மறுப்பு!

பண்டத்தரிப்பு

வலி. வடக்கில் உயர் பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள கருகம்பனை கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் வேள்வி நடத்த படையினர் அனுமதி மறுத்துள்ளனர்.

கவுணாவத்தை வைரவர் ஆலயத்தில் வருடாந்தம் பொங்கல் விழா நடைபெற்று மறுநாள் மிருகப்பலி கொடுக்கும் வேள்வி நடைபெறும்.

படையினர் யாழ். குடாநாட்டை ஆக்கிரமித்த பின்னர் உயர்பாதுகாப்பு வலயத்தினுள் இந்த ஆலயம் அமைந்துள்ளமையால் வருடாந்தம் இராணுவத்தினரின் அனுமதியுடன் வேள்வி நடைபெற்று வந்தது.

இந்தமுறை படையினர் பாதுகாப்பு வலயத்தினுள் சென்று வேள்வி நடத்த அனுமதி மறுத்ததால் பாதுகாப்பு வலயத்துக்கு வெளியே உள்ள தனியார் காணி ஒன்றில் இந்த வேள்வியை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இன்று அதிகாலை 5 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனையுடன் ஆரம்பமாகி பொங்கல் நிகழ்வு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.(43)

# வீடியோ கடை கூரை பிரித்து பெருமளவு பொருட்கள் திருட்டு

பண்டத்தரிப்பு

பண்டத்தரிப்பு சந்திக்கு அண்மையில் அமைந்துள்ள வீடியோ கடை ஒன்றில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு கூரைபிரித்து பெருமளவு பொருட்கள் திருடப்பட்டன. கடையில் இருந்த வீடியோ டெக் மற்றும் ஆங்கில திரைப்பட சீடிக்கள், இருபதாயிரம் ரூபா ரொக்கப்பணம் உட்பட குளிர்பான வகைகளும், பால்மா வகைகளும் திருடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற கடைக்கு அண்மையில் 50 மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் உள்ளபோதும் துணிகரமாக இந்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை, இந்தத் திருட்டு இடம்பெற்றிருப்பது மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (43)

# அல்லைப்பிட்டி பகுதிக்கு விரைவில் மின்சாரம்!

யாழ்ப்பாணம்

சுமார் இருபது வருட காலமாக மின்சார வசதி இன்றி பல்வேறு இடையூறுகளுக்கு முகம் கொடுத்து வரும் அல்லைப்பிட்டி மக்களின் நன்மை கருதி, அந்தப் பகுதிக்கு உடனடியாக மின்சார வசதிகளை செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகள் துரிதகதியில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

இது தொடர்பாக அமைச்சு வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

அண்மையில் இடம்பெயர்ந்த நிலையில் யாழ். அடைக்கலமாதா மற்றும் நாவாந்துறை புனித நிக்கலஸ் ஆகிய தேவாலயங்களில் தங்கியிருந்த அல்லைப்பிட்டி மக்களைச் சந்தித்த போது, அவர்களின் அடிப்படை மற்றும் அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்து தருவதாக அந்த மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளுக்கு அமைவாக தற்போது அல்லைப்பிட்டி பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான அனைத்துப் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக நேற்று அமைச்சு அலுவலகத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அமைச்சர் இதனை தெரிவித்தார்.

மீளக்குடியமர்ந்துள்ள அல்லைப்பிட்டிப் பகுதி மக்களுக்கான இழப்பீடுகள் யாவும் விரைவில் வழங்கப்படவிருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் -

அந்தப் பகுதியில் மருத்துவ வசதிகளை பெற வைத்தியசாலைகள் இல்லாத நிலையில், அதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளும், போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நடவடிக்கைகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அல்லைப்பிட்டி மக்கள் தத்தமது வீடுகளுக்கு மின்சார இணைப்புக்களைப் பெற்றுக்கொள்வதற்கான படிவங்கள் இன்னும் ஓரிரு தினங்களில் விநியோகிக்கப்படவுள்ளதாகவும், இந்த விண்ணப்பப் படிவங்களை பூர்த்தி செய்து தங்களது வீடுகளுக்கான மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியுமென்றும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். அகவொளி நிறுவனம் கோல்வே பல்கலையுடன் இணைவு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் வீதியிலுள்ள அகவொளி நிறுவனம் தற்போது அயர்லாந்து கோல்வே பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

அகவொளி குடும்ப வளத்துணை நிலையத்தில் உளவியல் ஆற்றுப்படுத்துகை டிப்ளோமா கற்கைநெறி ஒவ்வொரு வருடமும் நடைபெற்று வருகிறது. கடந்த வருடம் கல்வி பயின்ற மாணவர்களுக்குரிய சான்றிதழ் வழங்கும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. இதேவேளை, 2006, 2007 ஆம் ஆண்டுக்குரிய கற்கை நெறி விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

# ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணம்; பற்றீசியன் அணி கைப்பற்றியது!

யாழ்ப்பாணம்

வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் மானிப்பாய் பரிஷ் கழக அணிக்கும் பற்றீசியன் கழக அணிக்கும் இடையில் நடைபெற்றது.


இந்தப் போட்டியில் பற்றீசியன் கழக அணி ஒரு விக்கெட்டால் வெற்றி பெற்று வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றியது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மானிப்பாய் பரிஷ் கழக அணி 44.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் வீரசிங்கம் 21, ஜெயராஜ் 24, ஜெயதீபன் 32, சிவாஸ்கர் 43 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றனர்.

பற்றீசியன் கழக அணி சார்பாக சுஜீவன் 9 ஓவர்களில் 30 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

179 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய பற்றீசியன் கழக அணி 34.3 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.



மானிப்பாய் பரிஷ் அணியைச் சேர்ந்த என்.ஜெயராஜ் பிரதம விருந்தினரிடமிருந்து தொடர் நாயகனுக்கான வெற்றிக் கிண்ணத்தைப் பெறுகிறார்.

வெற்றி பெற்ற பற்றீசியன் கழக அணிக்கு வெற்றிக்கிண்ணமும் பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இந்தப் போட்டியின் சிறந்த வீரராக பற்றீசியன் கழக அணி வீரர் சுதர்சன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

வீ.டி ஜெயரட்ணசிங்கம் வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டியில் தொடர் நாயகனாக மானிப்பாய் பரிஷ் கழக அணி வீரர் என்.ஜெயராஜ் தெரிவு செய்யப்பட்டார்.

இந்தப்போட்டியில் பிரதம விருந்தினராக யாழ்.இந்துக்கல்லூரி ஆசிரியர் ஆர்.ரவீந்திரநாதனும், சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் கே.சதாசிவமும் கலந்துகொண்டனர்.

இந்தப்போட்டிக்கு சண். தயாளனும், ரி.வசிகரனும் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

# சின்னஞ்சிறு செய்திகள்

## மத்திய கல்லூரி மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி க.பொ.த (உ/த) பரீட்சைக்கான விடுமுறையின் பின் நாளை மறுதினம் திங்கட்கிழமை கற்றல் கற்பித்தல் நடவடிக்கைக்காக மீள ஆரம்பிக்கப்படவுள்ளதால் - சகல மாணவர்களும், ஆசிரியர்களும் அன்றைய தினம் கல்லூரிக்கு சமுகமளிக்குமாறு கல்லூரியின் அதிபர் எஸ்.பத்மநாதன் தெரிவித்தார்.


## பொதுக்கூட்டம்

கொக்குவில்


யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை முற்பகல் 10.30 மணிக்கு யாழ்.பத்திரிசியார் கல்லூரி வளாகத்தில் ஏ.எவ்.ரீ.அல்பிரட் தலைமையில் நடைபெறும்.

இந்தக் கூட்டத்தில் தீர்க்கமான தீர்மானங்களை எடுக்க சங்கத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கழகங்கள் தமது 3 அங்கத்தவர்களை அனுப்புமாறும் கேட்கப்பட்டுள்ளது. (206)

# இறுதிப் போட்டியில் பற்றீசியன் எதிர் பல்கலைக்கழகம்




இருப்பவர்கள் - இடமிருந்து வலம்.
எஸ்.பி.ரத்னராஜா (முகாமையாளர்), பி.பார்த்தீபன், ரி.ஜீட் அன்ரனைனஸ் (அணித்தலைவர்), வண.பிதா ஜஸ்ரீன், பி.ஞானப்பிரகாசம், ரி.ஜெயாமுகுந்தன், ஜீ.ஆர்.தேவராஜன் (துணைத் தலைவர்), ஏ.எஸ்.நிசாந்தன் (பயிற்றுனர்).
நிற்பவர்கள் - இடமிருந்து வலம்
எஸ்.ஜெனன்ராஜ், ஆர்.வினோதன், ஏ.ஆர்.சேர்ச்சில், ஜி.செல்வின் லோய்ட், ஏ.ஜே.ஜெயந்திரன், வி.விதுபாலா, ஏ.மரின்குமார்.




இருப்பவர்கள் - இடமிருந்து வலம்.
ஜி.டி.மதியழகன் (பயிற்றுனர்), ரி.கௌரிபாலன், ஜி.அருள்ராஜ் (அணித்தலைவர்), ஏ.ரஜிபன் (துணைத் தலைவர்), ரி.சர்வானந், கே.பந்துலன், கே.கணேசானந்தன் (முகாமையாளர்).
நிற்பவர்கள் - இடமிருந்து வலம்
ஜி.உதயணன், எஸ்.ஶ்ரீபிரசன்னா, ஏ.ஜெயந்தன், பி.ரவிசங்கர், வி.மணிவண்ணன், எஸ்.கோபி நாத், ஜே.சஞ்ஜோபன், ஏ.நிசாந்தன், என்.செந்தூரன்.

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்டத்திலுள்ள அழைக்கப்பட்ட கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட 30 ஓவர்கள் கொண்ட மென்பந்து கிரிக்கெட் போட்டி நடைபெற்று வருகிறது.

யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவையின் அனுசரணையுடன் நடைபெறும் இந்தப் போட்டியின் இறுதிச் சுற்றுக்கு யாழ். பல்கலைக் கழக அணியும், பற்றீசியன் விளையாட்டுக் கழகமும் தெரிவு செய்யப்பட்டன.

நாளை காலை 9 மணிக்கு யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் இறுதிப் போட்டி நடைபெறவுள்ளது. இந்தப் போட்டிக்கு யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ வணிகபீட பேராசிரியர் எம்.நடராஜசுந்தரம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

நமது ஈழநாடு
The Namadhu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# யுவதியின் கையிலிருந்தபோது வெடித்துச் சிதறிய செல்போன்!

## யாழ். நகரில் பரபரப்பு

யாழ்ப்பாணம்—

யாழ்.நகரில் யுவதி ஒருவரின் கையிலிருந்த செல்போன் திடீரென வெடித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக்கு முன்பாக யுவதி ஒருவர் தனது செல்போனை இயக்க முயன்றபோது அது வெடித்தது.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தையடுத்து - குறித்த யுவதி அதிர்ச்சியில் மயங்கிவிழுந்ததாகவும் தெரியவருகிறது.

அதேவேளை, யுவதியின் வசம் இருந்த செல்போனை படையினர் எடுத்துச் சென்றிருப்பதாகவும் கூறப்படுகிறது.

தொழில்நுட்பக் கோளாறுகளால் செல்போன்கள் சில சந்தர்ப்பங்களில் அதிக வெப்பமேறி வெடித்துச் சிதறுவதும், இதனால் பலர் காயமடைந்ததாக செய்திகள் முன்னர் வெளியாகியிருந்தன.

எனினும், இத்தகைய சம்பவம் யாழ். நகரில் தற்போதைய சூழலில் இடம்பெற்றது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## அடுத்த வாரம் பாரிய...

திட்டமிடப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் பலத்தை வெளிக்காட்டும் வகையில் இந்தத் தாக்குதல்களை ஒருங்கிணைக்குமாறு புலிகளின் தலைவர் பிரபாகரன் தனது பிராந்தியத் தளபதிகளுக்கு அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார்.

இந்த வாரத்தில் இந்தத் தாக்குதல்களை முன்னெக்கவிருந்தபோதும் - ஒஸ்லோவிலிருந்து தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினர் நாடு திரும்பும்வரை பொறுத்திருக்குமாறு புலிகளின் தலைவர் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் முன்னரங்க பாதுகாப்பு நிலைகள்மீது பாரிய தாக்குதல்களை நடத்துவதற்காக அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு நெருக்கமாகப் புலிகள் பெருமளவு போராளிகளையும், கனரக ஆயுதங்களையும் நகர்த்தியுள்ளனர்.

அதேவேளை, கிழக்கில் மட்டக்களப்புப் பகுதியில் 20 பேர் கொண்ட தெரிவுசெய்யப்பட்ட பிஸ்டல் பயிற்சி பெற்ற அணியொன்று தாக்குதலுக்குத் தயார்ப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் புலிகள் வாங்கிய நவீன பிஸ்டல்களைக் கொண்டு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், அரசியல்வாதிகள்மீது தாக்குதல் நடத்தவும் திட்டமிட்டிருப்பதாகவும் - இவர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட தளபதி கேணல் பாணு காட்டுப் பகுதியொன்றில் பயிற்சிகளை வழங்கியிருப்பதாகவும் புலனாய்வு சேவைகள் - அரச பாதுகாப்பு வட்டாரங்களை எச்சரித்திருப்பதாக அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின்...

இந்த நிலையில், குறிப்பிட்ட காட்டுப்பகுதியை இலக்குவைத்து வவுனியா ஜோசப் படைமுகாம் மற்றும் அதனை அண்மித்த இராணுவ முகாம்களிலிருந்து படையினர் ஆட்லறித் தாக்குதல்களை நடத்தினர்.

நேற்றுமுன்தினம் இரவும், நேற்றும் இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றன. சுற்றிவளைப்புக்குள் அகப்பட்டிருக்கும் தமது அணிகள் தப்புவதற்கோ, அவர்களை மீட்கவோதான் படைத்தரப்பு ஷெல் தாக்குதல்களை நடத்திவருவதாகவும் கருதப்படுகிறது.

## மூன்று...

கீழ் கிடந்தார். இவர் வரோதய நகரைச் சேர்ந்த பாபு என்று அடையாளம் காணப்பட்டார்.

மற்ற இரு இளைஞர்களும் அன்புவழிபுரம் மற்றும் உப்புவெளியைச் சேர்ந்தவர்கள் என்று தெரியவந்துள்ளது. இருப்பினும் இவர்கள் தொடர்பான முழு விபரங்கள் வெளியாகவில்லை.

மூன்று இளைஞர்களின் சடலங்களும் திருமலை வைத்தியசாலைக்கு நேற்று மாலை கொண்டு செல்லப்பட்டன.

## ஈழத்தமிழருக்கு ஆதரவு...

ஒன்றுபடு', ஆர்ப்பாட்டம் அனைத்து தமிழர் ஆர்ப்பாட்டம் ஈழத்தமிழர்களுக்காக ஆர்ப்பாட்டம்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் பின்னர், ஆர்ப்பாட்ட நிகழ்வில் பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை க.இராசேந்திரன் பேசும்போது -

ஈழத்தமிழரை பாதுகாக்கும் தன்னுடைய கடமையை ஆற்ற தமிழ்நாடு இன்று கிளர்ந்து எழுந்துள்ளது.

கடந்த இரு மாதங்களில் மட்டும் 200க்கும் மேற்பட்ட அப்பாவி தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

மன்னாரிலும், யாழ்ப்பாணத்திலும் மிகக் கொடூரமாக பெண்களும், குழந்தைகளும் கொல்லப்பட்டுள்ளனர்.

இணையத்தளங்களில் வெளியாகியுள்ள அந்தப் படங்களைப் பார்க்கவே முடியாத அளவுக்கு மிகக் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால், இணைய தளங்களிலே அந்த படங்கள் வெளியாகி உள்ள போதும்கூட, இங்கே உள்ள ஊடகங்கள் அவற்றை இருட்டடிப்பு செய்துவிட்டன.

இலங்கை பிரச்சினையில் இந்திய அரசு ஒரு சார்பாக நிலைப்பாடு எடுத்துவிடமுடியாது. உண்மை நிலையை அறிய நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பவேண்டும்.

ஈழத்தமிழர்களுக்கு உதவாமல் சிங்கள அரசை இந்தியா ஆதரிப்பது என்பது - இந்தியக் கட்டமைப்பிலே தமிழ்நாடு ஒரு தேசிய இனமாக உள்ளது. இந்தியக் கட்டமைப்பின் குடிமக்களாக வாழ்ந்து கொண்டிருக்கும், ஒரு தேசிய இனமாக வாழ்கின்ற இந்தத் தமிழர்களின் உணர்வுகளை அவமதிப்பதாகும்.

ஈழத்தமிழரின் விடுதலைப் போராட்டமானது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட போராட்டம் .

ஈழத்தமிழர்களே! தமிழகத்தில் உள்ள தமிழர்கள் - கட்சிகளை, இயக்கங்களை கடந்து இன்று உங்களுக்காகவே இணைந்து நிற்கிறோம் என்றார்.

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர் ரவிக்குமார் பேசும்போது -

இலங்கையில் புதிய ஆட்சி பொறுப்பேற்றதுமுதல் தொடர்ந்து தமிழர்கள் மீது தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன.

ஈழத்தமிழ் மக்களுக்காக போராடுகிற இயக்கத்தை சர்வதேச அளவில் தனிமைப்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதிலே தாங்கள் வெற்றியீட்டுவதாக சிங்கள அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது.

ஈழத்தில் நடக்கிற கொடுமைகளை இந்திய அரசு அறிந்து கொள்வதற்காக நாடாளுமன்றக் குழுவை அனுப்ப வேண்டும்.

இங்குள்ள தமிழக அரசும் பொறுப்பில்லை என்று சும்மா இருந்துவிடமுடியாது. இந்தக் கோரிக்கைகளை தமிழ்நாடு அரசும் வலியுறுத்த வேண்டும் என தெரிவித்தார்.

# திருமலையில் கைக்குண்டுவீச்சு

திருகோணமலை—

திருகோணமலை - அனுராதபுரம் சந்தியில் வீதிப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர்மீது நேற்று கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது. நேற்றிரவு 8.30 மணியளவில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தின் போது ஏற்பட்ட சேதவிபரங்கள் குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. எனினும் கைக்குண்டுத் தாக்குதலையடுத்து படையினர் சில நிமிடங்கள் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர்.

அத்துடன் அன்புவெளிபுரத்தில் உள்ள மக்கள் குடியிருப்புக்களினுள் நுழைந்த படையினர் பொதுமக்களை கண்மூடித்தனமாகத் தாக்கியதாகத் தெரியவருகிறது. (10,04)

## தாக்குதல்...

ஈடுபட்டிந்த விடுதலைப்புலிகள் தோணியில் வந்தோரை தாக்கினர். இந்தத் தாக்குதலில் மீட்கவந்த இருவரில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்டார். அதேவேளை, காட்டுக்குள் ஒளிந்து கொண்ட இருவரும் நேற்றுக்காலை கைதுசெய்யப்பட்டனர்.

கைதுசெய்யப்பட்ட நபரிடம் நடத்தப்பட்ட முதற்கட்ட விசாரணையின்போது பிடிக்கப்பட்டவர் தாம் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும், பற்பொடி இராணுவ முகாமிலிருந்து இயங்குவதாகவும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் மீது மட்டுமல்லாது கிடைக்கின்ற இலக்குகள் அனைத்தின் மீதும் கிளைமோர்த் தாக்குதல் மேற்கொள்ளுமாறு தங்களுக்கு பணிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் தயாமோகன் கூறியதாவது-

மட்டக்களப்பில் இராணுவத்தினர் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் கிளைமோர்த் தாக்குதல் நடத்த முயற்சித்தனர். இதில் ஒரு வாகனம் தப்பியது.

இதையடுத்து எமது போராளிகள் கிளைமோர்த் தாக்குதலை நடத்திய இராணுவத்தினரை திருப்பித் தாக்கினர். தொடர்ந்து தப்பியோடிய இராணுவத்தினரை தேடிச்சென்று அவர்கள் ஊடுருவும் பாதைகளை சுற்றி வளைத்தனர்.

தப்பியோடிய இராணுவத்தினரை மீட்பதற்காக மேலும் இருவரை இராணுவப் புலனாய்வுத் துறையின் பற்பொடி கொம்பனி முகாமிலிருந்து அனுப்பிவைத்தனர். அந்த இருவரும் ஏறாவூர் 5 ஆம் குறிச்சியில் தோணியூடாக கரையிறங்கியபோது எமது போராளிகளால் சோதனைக்குட்படுத்தப்பட்டனர். அப்போது மறைத்து வைத்திருந்த ஆயுதங்களால் போராளிகளைத் தாக்க முய்ன்றனர். போராளிகள் திருப்பித் தாக்கியதில் ஒருவர் கொல்லப்பட்டார். ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவர் புளொட் அமைப்பைச் சேர்ந்தவர் என்றும், புதூரைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

தப்பியோடிய இருவரையும் விடிவதற்குள் கைது செய்யக்கூடிய நிலையிலும், மேலதிக இராணுவத்தினர் அவர்களை மீட்க முடியாதபடியும் எமது போராளிகள் சுற்றி வளைத்தனர்.

தப்பியோடியோரைக் காப்பாற்ற இராணுவத்தினரோ, துணை இராணுவக்குழுவினரோ வந்தால் அவர்களையும் நாம் தாக்குவதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துள்ளோம் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, உயிரிழந்தவர் கருணா குழுவைச்சேர்ந்த வாசு என அடையாளம் காணப்பட்டார். இவர் ஈ.பி.ஆர்.எல்.எப் துரைரட்ணத்துடன் சேர்ந்தியங்கி பின்னர் கருணா குழுவுடன் இணைந்து கொண்டு செயற்பட்டவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், கருணா குழுவைச் சேர்ந்த இருவர் உட்பட மூவர் உயிருடன் பிடிக்கப்பட்டனர். முனைக்காட்டைச் சேர்ந்த சுந்தரலிங்கம் திருநாவுக்கரசு, பங்குடாவெளியைச் சேர்ந்த அகிலன் எனப்படும் கதிர்காமத்தம்பி இதயராசா ஆகிய கருணா குழுவைச் சேர்ந்த இருவரும், புளொட் குழுவைச் சேர்ந்த புதூர் வாசியான நவரத்தினம் பிரதாபன் ஆகியோரே புலிகளால் பிடிக்கப்பட்டவர்களாவர்.

# ஊடுருவிய சிப்பாயின் சடலம் அரசாங்கத்திடம் ஒப்படைப்பு

வவுனியா—

வவுனியா மாவட்டம் நெடுங்கேணி - புளியங்குளம் வீதியிலுள்ள மதியாமடு பகுதியில் புலிகளின் தாக்குதலுக்குப் பலியான ஆழ ஊடுருவித் தாக்கும் படையணியைச் சேர்ந்த இராணுவச் சிப்பாயின் சடலம் நேற்று படையினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற தாக்குதலில் கொல்லப்பட்ட சிப்பாயின் சடலமே புளியங்குளத்தில் உள்ள அரசியல்துறை செயலகத்தில் வைத்து நேற்றுக்காலை 10 மணியளவில் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மூலம் கையளிக்கப்பட்டது.

இந்தநிகழ்வில் வவுனியா அரசியல்துறை பொறுப்பாளர் ஞானம், தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா, புளியங்குளம் பிரதேசப் பொறுப்பாளர் இந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சடலத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி சைமன் வுல்ப், போர் நிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் கண்காணிப்பாளர் யூக்கா ஆகியோர் பொறுப்பேற்று வவுனியாவுக்கு எடுத்துச் சென்று படையினரிடம் ஒப்படைத்தனர்.

# நேற்றும் குடாநாட்டில் படையினர்மீது தாக்குதல்

யாழ்ப்பாணம்—

தென்மராட்சி-தனங்கிளப்பில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் படைத்தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மேலும் ஒருவர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகிறது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினரை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. காயமடைந்த இராணுவச் சிப்பாய் பலாலி இராணுவ மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதேவேளை, கொக்குவிலில் இராணுவத்தினர்மீது நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் படைச்சிப்பாய் ஒருவர் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. நேற்றுப் பிற்பகல் 1.30 மணியளவில் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே மேற்படி சிப்பாய் காயமடைந்தார்.

இந்தத்தாக்குதலைத் தொடர்ந்து இராணுவத்தினர் நடத்திய கண்மூடித்தனமான துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் காயமடைந்துள்ளார். படுகாயமடைந்த உடுவிலைச் சேர்ந்த நடராஜா சுஜீவன் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

# ஸ்ரான்லி வீதி ஊடான போக்குவரத்துக்கு தடை

யாழ்ப்பாணம்—

யாழ்.நகர் ஸ்ரான்லி வீதியூடான வாகனப் போக்குவரத்துக்களை படையினர் தடைசெய்துள்ளனர்.

சிறிதர் தியேட்டரில் இயங்கும் ஈ.பி.டி.பி அலுவலகத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தங்கியிருப்பதாலேயே ஸ்ரான்லி வீதியூடான போக்குவரத்துக்களை படையினர் தடைசெய்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை - ஆரியகுளம் சந்தி, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோவில் சந்தி உள்ளிட்ட நகரின் முக்கிய இடங்களில் பெருமளவு படையினர் நிறுத்தப்பட்டு வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

யாழ்.பஸ் நிலையப் பகுதியிலும் நேற்று வழமைக்கு மாறாக அதிகளவு படையினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## திருமலையில்...

பிரதேசங்களை நோக்கி தொடர்ச்சியான ஷெல் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் உடனடியாக கிடைக்கவில்லை.

எனினும், மக்கள் குடியிருப்புக்களைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு சென்றதால் உயிர்ச் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லை என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

(10) (04)

A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களிற்கான
SCC இன் விசேட கணனிப் பயிற்சி நெறிகள்
Special Offer 2000/=
கீழுள்ள பயிற்சி நெறிகளில் இரண்டினை 2000ரூபாவுடன் கற்க, மாணவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்
இக்கல்வி ஆண்டில் மிக நவீன கணனித் தொழில்நுட்ப அறிமுகங்களுடன் ஆரம்பமாகும் பயிற்சி நெறிகள்
Diploma in Microsoft office
Diploma in Desktop Publishing
Diploma in Hardware Engineering
Diploma in Network Engineering
Diploma in Web Designing
Diploma in Computer Science
Diploma in Internet E-mail
New Batches Start On
Batch I :- 25.06.2006
Batch II :- 28.06.2006
Batch III :- 01.07.2006
குறைந்த கட்டணம்
அங்கீகாரமுள்ள சான்றிதழ்
வரையறையற்ற செய்முறை
தேர்ச்சி பெற்ற ஆசிரியர் குழு
குறிப்பிட்டளவு மாணவர்கள் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படவிருப்பதால் ஆர்வமுள்ள மாணவர்கள் உடன் பதிவு செய்து கொள்ளுங்கள்
Softview Computer College
Head Office :- 43, Arasady Road, Thaddatheru Junction, Jaffna.
Branch :- 55, Arasady Road, Jaffna.
T.P: 021 2225170, 0777846811

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.06.2006 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.